# 1963ம் ஆண்டு பொருளாதார நிதி நிலைமைகளின் போக்கு

## (அ) தேசிய உற்பத்தியும் செலவும்

### முன்னுரை

தற்காலிக மதிப்பீடுகளின்படி, நடைமுறைச் சினைக்கொள்விலைகளிலான மொத்த தேசிய உற்பத்தி 1962ம் ஆண்டில் 64180 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1963ம் ஆண்டு 67270 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. 1963ம் ஆண்டில் ஏற்பட்ட 4.8 சதவீத அதிகரிப்பு, 1962ம் ஆண்டில் ஏற்பட்ட 4.5 சதவீத அதிகரிப்பிலும் (திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடுகள்) பார்க்க உயர்ந்ததாகவும், 1960-1962ம் ஆண்டுகளில் ஏற்பட்ட சராசரி அதிகரிப்பாகிய 3.1 சதவீதத்திலும் பார்க்க மிக உயர்ந்ததாகவும், இருக்கின்றது.

1962ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், நிலையான[1] விலைகளின்படி, 1963ம் ஆண்டுக்கான மொத்த தேசிய உற்பத்தி 1.8 சதவீதத்தால் அதிகரித்தது. பணநியதியின்படி 1962ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1963ம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தியின் சதவீத அதிகரிப்பு உயர்ந்ததாகக் காணப்பட்ட பொழுதிலும், உண்மைநியதியின்படி அது சிறிது தாழ்ந்ததேயாகும். கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி 1963ம் ஆண்டில் ஏற்றுமதித்துறையின் நிகர உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. 1962ம் ஆண்டில், 5.1 சதவீத அதிகரிப்பைக் காட்டிய உள்நாட்டு ஏற்றுமதிகளின் பெறுமானம் 1963ம் ஆண்டில் 3.5 சதவீத வீழ்ச்சியைக் காட்டிற்று. நிலையான விலைகளின்படியான மதிப்பீடுகளிற் பிரதிபலித்துள்ளபடி ஏற்றுமதிகளின் அளவுகளில் ஏற்பட்ட மாற்றம், 1963ம் ஆண்டில் 3.9 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டுகின்றது. இதற்கு தெங்கு ஏற்றுமதிகளின் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சி பெருமளவிலும், இரப்பர் ஏற்றுமதிகளின் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சி குறைந்த அளவிலும் காரணங்களாகும். தேயிலை ஏற்றுமதிகளின் அளவு மிதமாக அதிகரித்துள்ளது. எனினும், 1962ம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவால் வீழ்ச்சியடைந்த ஏற்றுமதிப்பொருட்களின் கையிருப்பு நிலைமை, 1963ம் ஆண்டில் பொதுப்படையானதோர் அதிகரிப்பைக் காட்டிற்று. ஏற்றுமதிப் பொருட்களின் பெறுமானத்துடன் கையிருப்புக்களின் பெறுமானத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் சேர்த்துக் கணிக்கும்பொழுது, ஏற்றுமதித்துறையின் நிகர உற்பத்தி பணநியதியின்படி 1.5 சதவீதத்தாலும், உண்மை நியதியின்படி 1.9 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றது.

ஏற்றுமதித்துறையின் நிகர உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் தோரணையில் மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு, உள்நாட்டுத் துறையின் நிகர உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பையே முற்றிலும் சாருகின்றது. நடைமுறை விலைகளின்படி 1962ம் ஆண்டில் ஏற்பட்ட 5.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டில் இவ்வதிகரிப்பு விகிதம் 6.7 சதவீதமாக விளங்கியது. நிலையான விலைகளின்படி 1962ம் ஆண்டில் ஏற்பட்ட 4.2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வதிகரிப்பு விகிதம்

1. 1959ம் ஆண்டு விலைகள்.

3.1 சதவீதமாக விளங்கியது. உள்நாட்டுத்துறையில் ஏற்பட்ட விரிவிற்கு கைத்தொழிலும், அரசாங்க முயற்சிகளில் ஏற்பட்ட மூலதன அபிவிருத்தியும், மீன்பிடித்தொழிலும் பிரதானமாக உதவின. 1962ம் ஆண்டில் 11.3 சதவீதத்தால் அதிகரித்த நெல் உற்பத்தி 1963ம் ஆண்டில் 2.3 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்துள்ளது.

நுகர்ச்சிச் செலவையும் மூலதன ஆக்கத்தையும் கொண்டுள்ள மொத்த தேசிய செலவு நடைமுறைச் சந்தை விலைகளின்படி 4.2 சதவீதத்தால் 1962ம் ஆண்டிலிருந்த 68720 இலட்சம் ரூபாய்களிலிருந்து 71610 இலட்சம் ரூபாய்களுக்கு 1963ம் ஆண்டு அதிகரித்தது. மொத்த மூலதன ஆக்கம் வீழ்ச்சியுற்ற பொழுதிலும் நுகர்ச்சிச் செலவு, மூலதன ஆக்கத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியை ஈடுசெய்யும் அளவிற்கும் கூடியதாக அதிகரித்துள்ளது. நுகர்ச்சிச் செலவு சம்பந்தமாக, இறக்குமதிப் பொருட்களின்மீதுள்ள செலவுகள் வீழ்ச்சியுற்றனவாயினும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின்மீதுள்ள செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின்மீதுள்ள செலவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியை ஈடுசெய்யும் அளவிலும் பார்க்கக் கூடியதாக விளங்கிற்று. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மீதான செலவில் ஏற்பட்ட வீழ்ச்சி, 1962ம், 1963ம் ஆண்டுகளில் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகளையே சாரும்.

1963ம் ஆண்டில் இறக்குமதிப்பொருட்களின் விலைவாசிகள் அதிகரித்த பொழுதிலும் ஏற்றுமதிப்பொருட்களின் விலைவாசிகள் மாற்றமெதுவுமின்றி நிலையாகவே இருந்தன. எனவே இதன் காரணமாக வர்த்தக மாற்றுவிகிதம் பாதகமானதோர் நிலையை அடைந்தது. பாதகமான வர்த்தக மாற்றுவிகிதத்தின் பயனாக ஒரு குறிப்பிட்ட அளவு ஏற்றுமதிப் பொருட்களுக்கு ஈடாகக் கிடைக்கக்கூடிய இறக்குமதிப் பொருட்களின் அளவு குன்றுகின்றது. ஓர் ஏற்றுமதி-இறக்குமதிப் பொருளாதாரத்தின் வர்த்தக மாற்று விகிதத்தில் இவ்வித மாறுதல்கள் ஏற்படும்பொழுது, உற்பத்தி செய்யப்பட்ட மொத்தப் பொருட்களினதும் சேவைகளினதும் பரிமாற்றுப் பெறுமானம், அதாவது உண்மைத் தேசிய வருமானம் தாழ்த்தப்படுகின்றது. வர்த்தகமாற்றுவிகிதத்தில் ஏற்பட்ட மாற்றங்களுக்குத் திருத்தியமைக்கப்பட்டபின் உண்மை உற்பத்தியின் மதிப்பீடுகள், உண்மைத் தேசிய வருமானத்தின் மதிப்பீடுகளைக் காட்டுகின்றது. உண்மை உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பு, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களினதும் சேவைகளினதும் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பின் குறிகாட்டியாக விளங்குகின்றபொழுது, உண்மைத் தேசிய வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பு, உற்பத்தியின் பயனாகவும், சர்வதேசப் பரிமாற்றலின் பயனாகவும் தேசத்திற்குக் கிடைக்கக்கூடிய சாதனங்களின் அதிகரிப்பை அளவை செய்யத்தக்கதோர் கருவியாக விளங்குகின்றது. 1963ம் ஆண்டில் உண்மை உற்பத்தி 1.8 சதவீத அதிகரிப்பைக் காட்டிய பொழுதிலும், வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்பட்ட சீர்கேட்டின் காரணமாக உண்மைத் தேசிய வருமானம் 0.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இது 1962ம் ஆண்டில் ஏற்பட்ட அனுபவத்திற்கு எதிர்மாறானதாக விளங்குகின்றது. அவ்வருடத்தில் உண்மை உற்பத்தியும், உண்மை வருமானமும் அதிகரித்ததுடன், வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்பட்ட சீர்திருத்தத்தின் பயனாக உண்மைத் தேசிய வருமானத்தில் ஏற்பட்ட சதவீத அதிகரிப்பு, உண்மை உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பிலும் பார்க்க உயர்ந்ததாக விளங்கியது.

பணநியதியின்படி 1961ம் ஆண்டு 604 ரூபாய்களிலிருந்து 1962ம் ஆண்டு 615 ரூபாய்களுக்கு அதிகரித்த, சராசரி ஆளுக்கான உற்பத்தி, 1963ம் ஆண்டில் 628 ரூபாய்களுக்கு உயர்வடைந்தது. பணநியதியின்படி சராசரி ஆளுக்கான உற்பத்தியின் அதிகரிப்பு விகிதம் 1963ம் ஆண்டில் 2.1 சதவீதமாக இருந்தது. உண்மை நியதியின்படியான சராசரி ஆளுக்கான உற்பத்தி 1962ம் ஆண்டில் 622 ரூபாய்களாக விளங்கியதற்கெதிராக 1963ம் ஆண்டில் 617 ரூபாய்களாக விளங்கியது. 1962ம் ஆண்டில் ஏற்பட்ட 1.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1963ம் ஆண்டில் இது 0.8 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

### அட்டவணை II அ-1

### நடைமுறை விலைகளின்படி உற்பத்தியினதும், செலவினதும் சுருக்கமான காட்டிகள்

| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 |
|---|---|---|---|---|---|
| **அ. பெறுமானங்கள்** | | | | | |
| 1. சினைக்கொள் விலைகளின்படி மொத்த தேசிய உற்பத்தி (10 இலட்சம் ரூபாய்களில்) .. .. | 5,854 | 6,080 | 6,142 | 6,418 | 6,727 |
| 2. சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டுச் செலவு (10 இலட்சம் ரூபாய்களில்) .. .. | 6,617 | 6,820 | 6,820 | 7,023 | 7,313 |
| 3. சந்தை விலைகளின்படி தனிப்பட்டோர் நுகர்ச்சி (10 இலட்சம் ரூபாய்களில்) .. .. | 4,678 | 4,991 | 4,849 | 5,010 | 5,309 |
| 4. சந்தை விலைகளின்படி அரசாங்க நுகர்ச்சி (10 இலட்சம் ரூபாய்களில்) .. .. .. | 881 | 911 | 926 | 979 | 1,011 |
| 5. சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் (10 இலட்சம் ரூபாய்களில்) | 1,069 | 966 | 978 | 1,031 | 982 |
| 6. பொருட்களினதும் (அ) சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் ஏற்றுமதிகள் (10 இலட்சம் ரூபாய்களில்) .. .. .. .. | 2,016 | 2,011 | 1,907 | 1,966 | 1,914 |
| 7. பொருட்களினதும் (ஆ) சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள் (10 இலட்சம் ரூபாய்களில்) .. .. .. | 2,176 | 2,209 | 1,972 | 2,070 | 2,014 |
| 8. சினைக்கொள் விலைகளின்படி சராசரி ஆளுக்குரிய மொத்த தேசிய உற்பத்தி (இ) (ரூபாய்களில்) .. | 608 | 614 | 604 | 615 | 628 |
| 9. சராசரி ஆளுக்குரிய மொத்த உள்நாட்டுச்செலவு (ரூபாய்களில்) .. .. .. | 687 | 689 | 671 | 673 | 683 |
| **ஆ. குறிகாட்டிப்புள்ளிகள் (1959=100.0)** | | | | | |
| 1. சினைக்கொள் விலைகளின்படி மொத்த தேசிய உற்பத்தி .. .. .. | 100·0 | 103·9 | 104·9 | 109·6 | 114·9 |
| 2. சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டுச் செலவு .. .. .. | 100·0 | 103·1 | 103·1 | 106·1 | 110·5 |
| 3. சந்தை விலைகளின்படி தனிப்பட்டோர் நுகர்ச்சி | 100·0 | 106·7 | 103·7 | 107·1 | 113·5 |
| 4. சந்தை விலைகளின்படி அரசாங்க நுகர்ச்சி .. | 100·0 | 103·4 | 105·1 | 111·1 | 114·8 |
| 5. சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் .. .. | 100·0 | 90·4 | 91·5 | 96·4 | 91·9 |
| 6. பொருட்களினதும் (அ) சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் ஏற்றுமதிகள் .. .. | 100·0 | 99·8 | 94·6 | 97·5 | 94·9 |
| 7. பொருட்களினதும் (ஆ) சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள் .. .. | 100·0 | 101·5 | 90·6 | 95·1 | 92·6 |
| 8. சினைக்கொள் விலைகளின்படி சராசரி ஆளுக்குரிய மொத்த தேசிய உற்பத்தி .. .. | 100·0 | 101·0 | 99·3 | 101·1 | 103·3 |
| 9. சராசரி ஆளுக்குரிய மொத்த உள்நாட்டுச் செலவு | 100·0 | 100·3 | 97·7 | 98·0 | 99·4 |

மூலம். இலங்கை மகா வங்கி.

(அ) ஏற்றுமதி செய்யப்பட்ட வணிகப் பொருட்களின் பெறுமானம் (ஏற்றுமதி விலைகளின்படி)
(ஆ) இறக்குமதி செய்யப்பட்ட வணிகப் பொருட்களின் பெறுமானம் (இறக்குமதி விலைகளின்படி)
(இ) கீழ்க்காணும் குடிசனத்தொகை மதிப்பீடுகள் பாவிக்கப்பட்டுள்ளன:—

| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 |
|---|---|---|---|---|---|
| ஆண்டு நடுப்பகுதியில் குடிசனத்தொகை | 9,625,000 | 9,896,000 | 10,168,000 | 10,443,000 | 10,712,000 |
| குறிகாட்டிப் புள்ளிகள் .. | 100·0 | 102·8 | 105·6 | 108·5 | 111·3 |

## அட்டவணை II அ-2

### நடைமுறைச் சினைக்கொள் விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | சதவீதமாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960 ல் இருந்து 1961ம் ஆண்டு | 1961ல் இருந்து 1962ம் ஆண்டு | 1962ல் இருந்து 1963ம் ஆண்டு |
| **I. ஏற்றுமதிக்கான உற்பத்தி** | | | | | | | | | |
| (i) உள்நாட்டு ஏற்றுமதிகள்: ஏற்றுமதி விலைப் பெறுமானம் .. | 1,692 | 1,775 | 1,681 | 1,766 | 1,705 | + 4.9 | — 5.3 | + 5.1 | — 3·5 |
| கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றத்தின் பெறுமானம் .. .. | — 2 | — 39 | + 15 | — 34 | + 12 | | | | |
| இறக்குமதி செய்து உபயோகிக்கப்பட்ட பொருட்களின் நீக்கம் (சந்தை விலைகளில்) .. .. | —124 | —120 | —135 | —151 | —160 | | | | |
| ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் விநியோகச் செலவு நீக்கி .. | —104 | —109 | —114 | —123 | —119 | | | | |
| நிகர உற்பத்தி .. .. | 1,462 | 1,507 | 1,447 | 1,458 | 1,437 | + 3.0 | — 4.0 | + 0.8 | — 1·4 |
| (ii) திருப்பி ஏற்றுமதிசெய்யப்பட்டவைகள்: கூட்டப்பட்ட பெறுமானம் .. .. .. | 3 | 2 | 2 | 2 | 1 | —20.0 | ... | —20.0 | —37·5 |
| **ஏற்றுமதிக்கான மொத்த உற்பத்தி: நிகர உற்பத்தி ..** | 1,465 | 1,509 | 1,449 | 1,460 | 1,438 | + 3.0 | — 3.9 | + 0.7 | — 1·5 |
| **II. உள்நாட்டுப் பாவனைக்கான உற்பத்தி (நிகர உற்பத்தி) ..** | | | | | | | | | |
| (i) விவசாயமும், வனவியலும், கால்நடையும், மீன்பிடித்தலும் .. | 1,276 | 1,341 | 1,385 | 1,426 | 1,498 | + 5.1 | + 3.3 | + 2.9 | + 5·0 |
| (ii) கைத்தொழில் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) .. .. | 255 | 305 | 342 | 406 | 484 | +19.3 | +12.1 | +19.0 | +19·1 |
| (iii) மூலதன அபிவிருத்தி (பொருட்களும், சேவைகளும்) .. | | | | | | | | | |
| (அ) அரசாங்கம் .. .. | 189 | 146 | 193 | 204 | 200 | —22.4 | +31.6 | + 5.7 | — 1·6 |
| (ஆ) அரசாங்க முயற்சிகள் .. | 55 | 61 | 65 | 86 | 106 | +11.5 | + 6.4 | +31.1 | +24·0 |
| (இ) தனிப்பட்டோர் துறையும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் .. .. | 265 | 259 | 252 | 270 | 262 | — 2.2 | — 2.9 | + 7.2 | — 2·9 |
| (iv) போக்குவரத்து (அரசாங்கம் அல்லாதவை).. .. .. | 450 | 493 | 476 | 500 | 532 | + 9.7 | — 3.4 | + 5.0 | + 6·3 |
| (v) வர்த்தகம் (அரசாங்கம் அல்லாதவை) .. .. .. | 628 | 633 | 608 | 643 | 742 | + 0.7 | — 4.0 | + 5.9 | +15·3 |
| (vi) குடியிருப்புக்களின் உடமை .. | 169 | 178 | 196 | 205 | 223 | + 5.9 | + 9.9 | + 4.5 | + 8·9 |
| (vii) அரசாங்கம் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) .. .. | 702 | 755 | 759 | 792 | 802 | + 7.6 | + 0.6 | + 4.3 | + 1·3 |
| (viii) சேவைகள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) .. .. | 438 | 445 | 457 | 474 | 493 | + 1.5 | + 2.8 | + 3.5 | + 4·0 |
| **மொத்தம்** | 4,426 | 4,616 | 4,733 | 5,005 | 5,341 | + 4.3 | + 2.5 | + 5.7 | + 6·7 |
| **III. மொத்த உள்நாட்டு உற்பத்தி ..** | 5,891 | 6,124 | 6,182 | 6,464 | 6,779 | + 4.0 | + 0.9 | + 4.6 | + 4·9 |
| **IV. வெளிநாட்டிலிருந்துவந்த நிகரச் சினை வருமானம் ..** | — 37 | — 44 | — 40 | — 47 | — 52 | | | | |
| **V. மொத்த தேசிய உற்பத்தி ..** | 5,854 | 6,080 | 6,142 | 6,418 | 6,727 | + 3.9 | +1.0 | + 4.5 | + 4·8 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

## விடயங்களின் விளக்கம்:

1. அரசாங்க விடயங்கள் II (iii) (அ)வும், II (vii)ம் மத்திய அரசாங்கத்தையும், உள்ளூர் ஆட்சிச் சபைகளையும் சேர்த்து விளக்கப்பட்டுள்ள பொழுதிலும், அரசாங்கக் கூட்டுத் தாபனங்களும், அரசாங்க முயற்சிகளும் (அதாவது புகையிரத, மின்சார, துறைமுக ஆணை, தபாற், தந்தி, உப்புத்திணைக்களங்கள்) விலக்கப்பட்டுள்ளன.

2. விடயம் II (vii) (அரசாங்கம், முன்பு சேர்க்கப்படாதவைகள்) அரசாங்கக் கட்டடங்களின் கணிக்கப்பட்ட வாடகைகளையும் சேர்த்துள்ளது.

3. அரசாங்கத்துறையில் மூலதன அபிவிருத்தியின் பயனாக ஏற்பட்ட நிகர உற்பத்தி [விடயம் II (iii) (அ)] பின்வருவனவற்றை அடக்கியுள்ளது.—
   - (அ) ஒப்பந்தத்தில் செய்யப்பட்ட அரசாங்க மூலதன வேலைகளில் ஏற்பட்ட நிகர உற்பத்தி.
   - (ஆ) மூலதன அபிவிருத்தியில் ஈடுபடும்போது ஏற்படுகின்ற சார்புச் சேவைகள், உதாரணமாக அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப் பொருட்களை ஏற்றி இறக்குதல் போன்றவை.

4. தனிப்பட்டோர் துறையிலும், அரசாங்கக் கூட்டுத் தாபனங்களிலும் மூலதன அபிவிருத்தியின் பயனாக ஏற்பட்ட நிகர உற்பத்தி [விடயம் II (iii) (இ)] பின்வருவனவற்றையும் அடக்கியுள்ளது.
   - (அ) கட்டட ஆக்கக் கைத்தொழில்களின் நிகர உற்பத்தி.
   - (ஆ) கட்டட ஆக்கப் பொருட்களையும், உள்நாட்டு உபயோகத்திற்கான ஏனைய மூலதனப் பொருட்களையும் உற்பத்தி செய்கின்ற கைத்தொழில்களின் நிகர உற்பத்தி.
   - (இ) பயிர் நடுகையினதும், மாற்று நடுகையினதும் நிகர விளைவு.

5. விடயம் II (iv) [போக்குவரத்து (அரசாங்கம் அல்லாதவையும்)], விடயம் II (v) [வர்த்தகம் (அரசாங்கம் அல்லாதவையும்)], இத்துறைகளில் இயங்கும் அரசாங்க முயற்சிகளின் நிகர உற்பத்தியையும் சேர்த்துள்ளன. ஏற்றுமதித்துறைக்கு அளிக்கப்பட்ட சேவைகளையும் இவ்விடயங்கள் அடக்குகின்றன. இங்கும் அங்கும் செய்த விசாரணைகளின் அடிப்படையில் உறுதியாக்கப்பட்டபடி ஏற்றியிறக்கல் கட்டணங்களிலும், வர்த்தக இலாப வீதங்களிலும் ஏற்பட்ட அதிகரிப்பைச் சேர்த்துக் கணித்திருப்பதின் நிமித்தம், வர்த்தகம், ஏற்றியிறக்கல் ஆகியனவற்றின் மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

## பொதுக்குறிப்புக்கள்:

1. பிரசுரிக்கப்பட்ட மூலங்களையும் (இலங்கைச் சுங்கப்புள்ளி விபரங்கள் போன்றவை), சில குறித்த விடயங்களின் விசேட மூலங்களையும் (உதாரணமாக கைத்தொழில் உற்பத்தி பற்றிக் கைத்தொழிற் திணைக்களம்) தவிர, இந்த அட்டவணையையும், மொத்த தேசிய செலவின் அட்டவணையையும் தயாரிக்கத் தேவையான சகல விபரங்களும், குடிசனத்தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் அளிக்கப்பட்டவை.

2. அட்டவணையிலுள்ள எண்கள் மட்டமாக்கப்பட்டதின் காரணமாக விடயங்களின் எண் தொகைகள் கூட்டப்படும் பொழுது, மொத்தங்களுடன் சரியாக ஒத்துவரமாட்டா.

3. அட்டவணைகளில் தரப்பட்டுள்ள சதவீத மாற்றங்கள் யாவும் ஒரு தசம தானத்தையுடைய பத்து இலட்சம் ரூபாய்களைப் பெறுமானங்களாகக் கொண்டு கணிக்கப்பட்டுள்ளன.

4. மு.சே.ப.—முன்பு சேர்க்கப்படாதவைகள்.

5. இலங்கை மகாவங்கியின் 1962ம் ஆண்டு அறிக்கையில் பிரசுரிக்கப்பட்ட 1959 முதல் 1962ம் ஆண்டு வரையுள்ள உற்பத்தியினதும், செலவினதும் மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. 1963ம் ஆண்டுக்கான மதிப்பீடுகள் தற்காலிகமானவை.

**பணநியதியின்படி உற்பத்தியும் செலவும்**

அட்டவணை II அ-2ல் நடைமுறைச் சினைக்கொள்விலைகளின்படி ஏற்றுமதித்துறையினதும், உள்நாட்டுத்துறையினதும், மொத்தத் தேசிய உற்பத்தியின் கூறுகள் தனித்தனியே காட்டப்பட்டுள்ளன. ஏற்றுமதித்துறையில், ஒவ்வொரு பிரதான ஏற்றுமதிப்பொருட்களினதும் பெறுமானம் 1963ம் ஆண்டில் வீழ்ச்சியுற்றது. தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமானம் 0.8 சதவீதத்தாலும், இரப்பர் ஏற்றுமதிகளின் பெறுமானம் 11.5 சதவீதத்தாலும், தேங்காயும், தெங்கு உற்பத்திப் பொருட்களினதும் பெறுமானம் 9.8 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றன. எனவே 1962ம் ஆண்டு 5.1 சதவீதத்தால் அதிகரித்த மொத்த உள்நாட்டு ஏற்றுமதிகளின் பெறுமானம், 1963ம் ஆண்டில் 3.5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. எனினும், 1963ம் ஆண்டில் ஏற்றுமதித்துறையின் பொதுவான கையிருப்பு நிலைமையின் மதிப்பீடுகள் முந்தைய ஆண்டிலும் பார்க்கச் சீர்திருந்தியவைகளாக விளங்கின. இவ்வுண்மையைச் சேர்த்துக் கணிக்கும்பொழுது ஏற்றுமதித்துறையின் நிகர உற்பத்தி 1.5 சதவீதத்தால் மட்டுமே வீழ்ச்சியுற்றது. ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தியை நோக்கும் பொழுது, 1962ம் ஆண்டு 2.6 சதவீதத்தால் விரிவடைந்த தேயிலை உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டில் இவ்விரிவு 3.9 சதவீதமாக விளங்கியது. இரப்பர் உற்பத்தியில் 1962ம் ஆண்டு ஏற்பட்ட 6.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டில் 0.9 சதவீத அதிகரிப்பு மட்டுமே ஏற்பட்டது. தெங்குப்பொருட்களின் உற்பத்தி 10.2 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றதென மதிப்பிடப்பட்டுள்ளது.

உள்நாட்டுத்துறையில் 1962ம் ஆண்டில் 2.9 சதவீதத்தால் அதிகரித்த விவசாயம், கால்நடை, மீன்பிடித்தல் ஆகியனவற்றின் நிகர உற்பத்தி, 1963ம் ஆண்டில் 5.0 சதவீதத்தால் அதிகரித்தது. மீன் உற்பத்திப் பெறுமானத்தில் ஏற்பட்ட 24.4 சதவீத அதிகரிப்பே, 1963ம் ஆண்டில் ஏற்பட்ட இவ்வுயர்ச்சிக்குப் பெருமளவில் காரணமாக விளங்குகின்றது. கைத்தொழிலின் (நுகர்ச்சிப்பொருட்கள்) நிகர உற்பத்தி, கிட்டத்தட்ட 1962ம் ஆண்டில் ஏற்பட்ட உயர்ச்சி வீதத்தின் அளவிற்தான் (அதாவது 19.1* சதவீதம்) அதிகரித்துள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது. 1962ம் ஆண்டில் 9.7 சதவீதத்தால் அதிகரித்த மொத்த மூலதன அபிவிருத்தி, இவ்வருடத்தில் 1.7 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. தனிப்பட்டோர் துறையிலும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் ஏற்பட்ட மூலதன அபிவிருத்தியை ஒருங்கே நோக்கும் பொழுது அது 2.9 சதவீதத்தால் வீழ்ச்சியுற்ற பொழுதிலும், அரசாங்க முயற்சிகளில் ஏற்பட்ட மூலதன அபிவிருத்தி ஒரு கணிசமான அதிகரிப்பை, அதாவது 24.0 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. சேவைத்துறையை ஒருங்கே நோக்கும் பொழுது அதன் நிகர உற்பத்தி 6.7 சதவீதத்தால் உயர்ந்துள்ளது. இது 1962ம் ஆண்டில் ஏற்பட்ட 4.8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடத்தக்கது. வர்த்தகம், போக்குவரத்து, குடியிருப்புக்களின் உடமை ஆகியவை முந்தைய ஆண்டிலும் பார்க்கக் கூடிய விகிதங்களால் அதிகரித்தன. முழுமையாக நோக்குமிடத்து 1962ம் ஆண்டு 5.7 சதவீதத்தால் அதிகரித்த உள்நாட்டுத்துறையின் நிகர உற்பத்தி, 1963ம் ஆண்டில் 6.7 சதவீதத்தால் உயர்ந்தது.

1963ம் ஆண்டில் பணநியதியின்படியான மொத்த தேசிய உற்பத்தி 4.9 சதவீதத்தால் அதிகரித்தது. முந்தைய மூன்று ஆண்டுகள் ஒவ்வொன்றிலும் ஏற்பட்ட அதிகரிப்பு விகிதங்களிலும் பார்க்க இது உயர்ந்ததாகும். 1963ம் ஆண்டு வெளிநாட்டிலிருந்து வந்த நிகர சினைவருமானம் வீழ்ச்சியுற்றதன் பயனாக மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட 4.8 சதவீத அதிகரிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் பார்க்கச் சிறிது தாழ்ந்ததாகவே விளங்குகின்றது.

உள்நாட்டுத்துறையின் நிகர உற்பத்தி, அதாவது, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாச்சாரமாக அமைந்த உள்நாட்டுத் தேவைக்கான உற்பத்தி, ஓர் அதிகரிப்புத்தன்மையைக் காட்டுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1959ம் ஆண்டில் 75.1 சதவீதமாக விளங்கிய இவ்விகிதாச்சாரம், 1962ம் ஆண்டில் 77.4 சதவீதத்திற்கும், 1963ம் ஆண்டு 78.7 சதவீதத்திற்கும் அதிகரித்தது.

*இவ்வறிக்கையின் வேறு பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள கைத்தொழில் உற்பத்திக் கணிப்பின் முடிவுகள் வெளியாகுமுன்னர், இம்மதிப்பீடு முடிவு செய்யப்பட்டது. இக்கணிப்பு முடிவுகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் மேலே தரப்பட்டுள்ள கைத்தொழில் உற்பத்தியின் உயர்ச்சி விகிதம் சிறிது கூடுதலானதாகத் தோன்றக்கூடும்.

உற்பத்தியாளர்களின் நடைமுறை விலைகளின்படி, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விபரங்கள் அட்டவணை II அ-3ல் காட்டப்பட்டுள்ளன.

1962ம் ஆண்டில் 10.4 சதவீதத்தால் அதிகரித்த உற்பத்தியாளர்களின் விலைகளிலான அரிசியின் பெறுமானம், 1963ம் ஆண்டில் 0.4 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்துள்ளதென்பது அட்டவணை II அ-3ல் இருந்து தெளிவாகின்றது. 1963ம் ஆண்டில் நெல் உற்பத்தி செய்யப்படும் பிரதேசங்களில் ஏற்பட்ட பெருமழை காரணமாக நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டது. நெல் உற்பத்தியில் 1962ம் ஆண்டு ஏற்பட்ட அதிகரிப்பாகிய 49 இலட்சம் புசல்களுடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டில் இவ்வதிகரிப்பு 11 இலட்சம் புசல்களாக மட்டுமே விளங்குகின்றது. எனவே, உற்பத்தியாளர்களின் விலைகளிலான அரிசியின் பெறுமானத்தில் ஏற்பட்ட இச்சிறிய அதிகரிப்பு, 1963ம் ஆண்டின் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட மட்டரகமான அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது.

உற்பத்தியாளர்களின் விலைகளிலான தேங்காய்களினதும், தேங்காயெண்ணெயினதும் பெறுமானம் 17.2 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. இப்பொருட்களுக்கான சராசரி உற்பத்தியாளர்களின் விலைவாசிகள் அதிகரித்திருப்பதே இதற்குப் பெருமளவு காரணமாக விளங்குகின்றது. மீன் சம்பந்தமான மதிப்பீடுகளை நோக்கும் பொழுது, அதன் உற்பத்தியில் ஓர் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதைக் காணலாம். மீன்பிடித்திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தற்காலிகமான தரவுகளின்படி, சகல வகைப்பட்ட மீன்களுக்குமான உற்பத்திப் பெறுமானம் 1963ம் ஆண்டில் 24.4 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

### அட்டவணை II அ-3

**உற்பத்தியாளர்களின் நடைமுறை விலைகளின்படி உள்நாட்டு நுகர்ச்சிக்கென உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள்**

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1961ல் இருந்து 1962ம் ஆண்டு | 1962ல் இருந்து 1963ம் ஆண்டு |
| **(i) விவசாயம், வனவியல், கால்நடை, மீன்பிடித்தல்** | | | | | | | | | |
| அரிசி .. .. .. | 400 | 472 | 475 | 524 | 527 | +18.2 | + 0.6 | +10.4 | + 0.4 |
| தேங்காயும் தெங்கு உற்பத்திப் பொருட்களும் .. | 208 | 168 | 147 | 135 | 159 | —19.4 | —12.2 | — 8.2 | +17.2 |
| தேயிலை .. .. .. | 54 | 56 | 56 | 55 | 55 | + 4.3 | ... | — 1.8 | + 0.7 |
| ஏனைய உணவுப்பயிர்கள் .. | 327 | 350 | 382 | 382 | 390 | + 7.1 | + 9.3 | ... | + 2.1 |
| புகையிலை .. .. | 14 | 15 | 19 | 21 | 22 | +10.9 | +23.7 | +13.8 | + 3.3 |
| வெற்றிலையும் பாக்கும் .. | 34 | 37 | 38 | 34 | 36 | + 7.3 | + 1.6 | — 8.3 | + 4.7 |
| விறகு .. .. .. | 14 | 14 | 15 | 15 | 15 | + 3.7 | + 3.5 | + 2.7 | + 2.7 |
| கால்நடை .. .. | 142 | 134 | 139 | 136 | 150 | — 5.6 | + 4.3 | — 2.7 | +10.4 |
| மீன் .. .. .. | 60 | 69 | 86 | 101 | 125 | +13.9 | +25.3 | +17.1 | +24.4 |
| ஏனைய விவசாய, வனவியற் பொருட்கள் .. .. | 49 | 52 | 53 | 55 | 58 | + 5.1 | + 2.9 | + 2.6 | + 6.4 |
| இறக்குமதி செய்து பாவிக்கப்பட்ட பொருட்களின் நீக்கம் (அ) | — 25 | — 25 | — 25 | — 33 | — 40 | | | | |
| உள்நாட்டு உற்பத்தியினால் கூட்டப்பட்ட பெறுமானம் .. | 1,276 | 1,341 | 1,385 | 1,426 | 1,498 | + 5.1 | + 3.3 | + 2.9 | + 5.0 |
| **(ii) கைத்தொழில் (மூலதன அபிவிருத்தியைத் தவிர்த்து)** | | | | | | | | | |
| ஆலைக் கைத்தொழில்கள் .. | 314 | 379 | 416 | 454 | 494 | +20.8 | + 9.8 | + 9.0 | + 8.9 |
| குடிசைக் கைத்தொழில்கள் .. | 110 | 113 | 116 | 120 | 122 | + 2.5 | + 2.9 | + 3.6 | + 1.3 |
| இறக்குமதி செய்து பாவிக்கப்பட்ட பொருட்களின் நீக்கம் (அ) | —168 | —187 | —191 | —167 | —132 | | | | |
| உள்நாட்டு உற்பத்தியினால் கூட்டப்பட்ட பெறுமானம் .. | 255 | 305 | 342 | 406 | 484 | +19.3 | +12.1 | +19.0 | +19.1 |

*(அ) சந்தை விலைகளில்.*

*மூலங்கள்:* இலங்கை மகா வங்கி. குடிசன மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம், கைத்தொழில் திணைக்களம், மீன்பிடித் திணைக்களம் ஆகியன.

## அட்டவணை II அ-4

## நடைமுறைச் சந்தை விலைகளின்படி மொத்தத் தேசிய செலவு

| | 10 இலட்சம் ரூபாய்களில் | | | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1961ல் இருந்து 1962ம் ஆண்டு | 1962ல் இருந்து 1963ம் ஆண்டு |
| **I. தனிப்பட்டோர் நுகர்ச்சி** | | | | | | | | | |
| (அ) பொருட்களினதும், சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள் | | | | | | | | | |
| (i) உணவினதும் ஏனைய சொந்த நுகர்ச்சிப் பொருட்களினதும் இறக்குமதிகள் (அ) .. .. | 1,817 | 1,913 | 1,718 | 1,751 | 1,711 | + 5.3 | —10.2 | + 2.0 | — 2.3 |
| (ii) சினைக்கொள் அல்லாத சேவைகளின் இறக்குமதிகள் .. | 178 | 152 | 137 | 128 | 130 | —14.5 | —10.0 | — 6.4 | + 1.9 |
| **மொத்தம்** .. .. | 1,995 | 2,065 | 1,854 | 1,879 | 1,841 | + 3.5 | —10.2 | + 1.3 | — 2.0 |
| (ஆ) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் (அ) சேவைகளும் .. .. | | | | | | | | | |
| (i) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் .. | 2,093 | 2,208 | 2,282 | 2,416 | 2,695 | + 5.5 | + 3.4 | + 5.9 | +11.5 |
| (ii) குடியிருப்புக்களின் வாடகை .. | 186 | 197 | 216 | 226 | 247 | + 5.9 | + 9.6 | + 4.3 | + 9.6 |
| (iii) போக்குவரத்து .. .. | 241 | 256 | 272 | 286 | 293 | + 6.2 | + 6.4 | + 4.9 | + 2.5 |
| (iv) சேவைகள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) .. | 467 | 475 | 488 | 506 | 523 | + 1.6 | + 2.8 | + 3.6 | + 3.5 |
| அரசாங்கக் கொள்வனவுகளின் நீக்கம் .. .. .. | —110 | — 41 | —102 | —133 | —119 | | | | |
| மொத்தம் .. .. | 2,878 | 3,095 | 3,157 | 3,301 | 3,639 | + 7.5 | + 2.0 | + 4.6 | +10.2 |
| (இ) இலங்கையில் வாசம் செய்யாதோர் கொள்வனவு செய்த பொருட்களினதும் சேவைகளினதும் நீக்கம் .. .. | —195 | —169 | —162 | —170 | —171 | | | | |
| **மொத்த தனிப்பட்டோர் நுகர்ச்சி** | 4,678 | 4,991 | 4,849 | 5,010 | 5,309 | + 6.7 | — 2.9 | + 3.3 | + 6.0 |
| **II. அரசாங்க நுகர்ச்சி** | | | | | | | | | |
| (i) பொருட்களிலும் சேவைகளிலும் ஏற்பட்ட நடைமுறைச் செலவு-மத்திய அரசாங்கம் .. | 771 | 803 | 831 | 880 | 906 | + 4.1 | + 3.5 | + 5.8 | + 3.0 |
| (ii) பொருட்களிலும் சேவைகளிலும் ஏற்பட்ட நடைமுறைச் செலவு-உள்ளூராட்சிச் சபைகள் | 90 | 87 | 74 | 78 | 83 | — 3.4 | —15.0 | + 5.8 | + 5.9 |
| (iii) அரசாங்கக் கட்டடங்களின் கணிக்கப்பட்ட வாடகைகள் .. | 20 | 21 | 21 | 22 | 22 | + 5.0 | + 0.5 | + 2.4 | + 2.3 |
| **மொத்தம்** .. .. | 881 | 911 | 926 | 979 | 1,011 | + 3.4 | + 1.7 | + 5.7 | + 3.2 |
| **III. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம்** | | | | | | | | | |
| (i) அரசாங்கம் .. .. | 256 | 238 | 249 | 260 | 257 | — 7.2 | + 4.9 | + 4.2 | — 1.2 |
| (ii) அரசாங்க முயற்சிகள் .. | 80 | 79 | 92 | 104 | 127 | — 0.3 | +15.5 | +13.1 | +22.8 |
| (iii) தனிப்பட்டோர் துறையும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் | 733 | 649 | 637 | 668 | 598 | —11.5 | — 1.9 | + 4.9 | —10.5 |
| **மொத்தம்** .. .. | 1,069 | 966 | 978 | 1,031 | 982 | — 9.7 | + 1.2 | + 5.5 | — 4.8 |
| **IV. கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள்** | | | | | | | | | |
| (i) அரசாங்கம் .. (ii) அரசாங்க முயற்சிகள் } (ஆ) .. | — 23 | — 17 | + 52 | + 43 | ... | | | | |
| (iii) தனிப்பட்டோர் துறையும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் (இ) .. .. | + 12 | — 31 | + 16 | — 41 | + 12 | | | | |
| **மொத்தம்** .. .. | — 11 | — 47 | + 67 | + 2 | + 12 | | | | |
| **V. மொத்த உள்நாட்டுச் செலவு (ஈ)** | 6,617 | 6,820 | 6,820 | 7,023 | 7,313 | + 3.1 | ... | + 3.0 | + 4.1 |
| **VI. வெளிநாட்டிலுள்ள நிகர முதலீடு (உ)** .. .. | —208 | —221 | — 94 | —144 | —146 | | | | |
| **VII. சர்வதேச நன்கொடைகளினதும் மாற்றங்களினதும் நிகர வரவுகளின் நீக்கம்** .. .. | + 12 | — 22 | — 11 | — 7 | — 5 | | | | |
| **VIII. மொத்தத் தேசிய செலவு** .. | 6,420 | 6,578 | 6,715 | 6,872 | 7,161 | + 2.5 | + 2.1 | + 2.3 | + 4.2 |

மூலங்கள்: அட்டவணை II அ-2ல் உள்ள பொதுக்குறிப்புகளைப் பார்க்கவும்.

(அ) சில்லறை விலைகளில்.

(ஆ) பின்வரும் விடயங்களின் கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் மட்டும்: இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, கோதுமை மா, சீனி, உத்தரவாத விலைத்திட்ட நெல்: சாராயம்.

(இ) தேயிலை, இரப்பர், கால்நடை ஆகியவற்றின் கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் மட்டும்.

(ஈ) நுகர்ச்சி, மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம், கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியனவற்றால் எழுந்த செலவிற்குச் சமமாகின்றது.

(உ) வெளிநாட்டிலுள்ள நிகர முதலீடுகள், நடைமுறைக் கணக்கில் தேசத்தின் மிகையாகும்.

## அட்டவணை II அ-5

### நடைமுறை விலைகளின்படி மொத்த தேசிய உற்பத்தியின் மீது ஏற்பட்ட செலவு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 |
|---|---|---|---|---|---|
| 1. சினைக்கொள் விலைகளின்படி மொத்த தேசிய உற்பத்தி .. | 5,854 | 6,080 | 6,142 | 6,418 | 6,727 |
| 2. மானியங்கள் நீக்கப்பட்டபின் மறைமுக வரிகள் (அ) .. | 389 | 413 | 390 | 472 | 455 |
| 3. சந்தை விலைகளின்படி மொத்ததேசிய உற்பத்தி .. | 6,243 | 6,493 | 6,532 | 6,890 | 7,182 |

| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 |
|---|---|---|---|---|---|
| 4. நுகர்ச்சிச் செலவு தனிப்பட்டோர் | 4,678 | 4,991 | 4,849 | 5,010 | 5,309 |
| 5. நுகர்ச்சிச் செலவு அரசாங்கம் .. | 881 | 911 | 926 | 979 | 1,011 |
| 6. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்: தனிப்பட்டோர் துறையும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் .. | 745 | 618 | 652 | 627 | 610 |
| 7. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்: அரசாங்கமும், அரசாங்க முயற்சிகளும் .. | 313 | 300 | 393 | 407 | 384 |
| 8. மொத்த உள்நாட்டுச் செலவு (ஆ) .. | 6,617 | 6,820 | 6,820 | 7,023 | 7,313 |
| 9. பொருட்களினதும், சினைகொள் அல்லாத சேவைகளினதும் ஏற்றுமதிகள் .. | 2,016 | 2,011 | 1,907 | 1,966 | 1,914 |
| 10. பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகளின் நீக்கம் .. | -2,176 | -2,209 | -1,972 | -2,070 | -2,014 |
| 11. சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி .. | 6,457 | 6,622 | 6,755 | 6,918 | 7,214 |
| 12. வெளிநாட்டிலிருந்து வந்த நிகர சினை வருமானம் | — 37 | — 44 | —40 | —47 | —52 |
| 13. எஞ்சியவை: கையிருப்புக்களில் ஏற்பட்ட மறைமுக மாற்றங்களும், புள்ளிவிபரத் தவறுகளும் .. | —177 | — 85 | —184 | + 18 | + 20 |
| **14. சந்தை விலைகளின்படி மொத்ததேசிய உற்பத்தியின் மீது ஏற்பட்ட செலவு (இ) ..** | 6,243 | 6,493 | 6,532 | 6,890 | 7,182 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

(அ) உள்ளூர் வரிகளையும் சேர்த்து.

(ஆ) நுகர்ச்சி, மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் ஆகியவற்ருல் எழுந்த செலவிற்குச் சமமாகின்றது.

(இ) இவ் அட்டவணையிலுள்ள 11ம், 12ம் விடயங்களின் அட்சர கணிதத் தொகை, அட்டவணை II அ-4ன் விடயம் (VIII)ல் காட்டப்பட்டுள்ளபடி மொத்த தேசிய உற்பத்திக்குச் சமமாகின்றது. இவ்வட்டவணையின் விடயம் 14 (சந்தை விலைகளின்படி மொத்த தேசிய உற்பத்தியின் மீது ஏற்பட்ட செலவு) 11ம், 12ம் விடயங்களின் அட்சர கணிதக் கூட்டுத் தொகையிலிருந்து விடயம் 13ல் (கையிருப்புக்களில் ஏற்பட்ட மறைமுக மாற்றங்களும், புள்ளிவிபரத் தவறுகளும்) காட்டப்பட்டுள்ள தொகையால் மட்டுமே வேறுபடுகின்றது.

நடைமுறைச்சந்தை விலைகளின்படியான மொத்த தேசிய செலவினது நேர்முக மதிப்பீடுகளை அட்டவணை II அ-4 அளிக்கின்றது. அட்டவணை II அ-5ன் இடது கைப்பக்கத்தில், சினைக்கொள் விலைகளின்படியான மொத்த தேசிய உற்பத்தியை நிகர மறைமுக வரிகளுக்கு மாற்றியமைப்பதின் மூலம், மொத்த தேசிய செலவு மதிப்பிடப்பட்டுள்ளது. 1962ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.3 சதவீதத்தால் அதிகரித்த தனிப்பட்டோரினது மொத்த நுகர்ச்சிச் செலவு, 1963ம் ஆண்டில் 6.0 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. தனிப்பட்டோரினது நுகர்ச்சியில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பிற்கு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மீது ஏற்பட்ட அதிகரித்த செலவீடுகளே முக்கிய காரணமாகும். 1962ம் ஆண்டில் ஏற்பட்ட 5.9 சதவீத அதிகரிப்பிற்கெதிராக 1963ம் ஆண்டில் இவ்வதிகரிப்பு 11.5 சதவீதமாக விளங்கியது. எனினும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள், சேவைகள் ஆகியவற்றின் மீது சந்தைவிலைகளின்படி எழுந்த செலவில் 1962ம் ஆண்டு ஏற்பட்ட 1.3 சதவீத அதிகரிப்பிற்கெதிராக 1963ம் ஆண்டில் 2.0 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டது. 1962ம் ஆண்டில் 5.7 சதவீதத்தால் அதிகரித்த அரசாங்க நுகர்ச்சி 1963ம் ஆண்டில் 3.2 சதவீதத்தால் அதிகரித்தது. தனிப்பட்டோர் துறையினதும், அரசாங்கத்துறையினதும் மொத்த நுகர்ச்சியில் முந்தைய ஆண்டு ஏற்பட்ட 3.7 சதவீத அதிகரிப்பிற்கெதிராக 1963ம் ஆண்டில் 5.5 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டது.

அட்டவணை II அ-4 மொத்த மூலதன ஆக்கத்தின் மதிப்பீடுகளையும் தருகின்றது. மொத்த மூலதன ஆக்கம், நிலையான மூலதன ஆக்கத்தையும், கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களையும் கொண்டதாக உள்ளது. 1961ம் ஆண்டிலும், 1962ம் ஆண்டிலும் முறையே 1.2 சதவீதத்தாலும், 5.5 சதவீதத்தாலும் அதிகரித்த மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம், 1963ம் ஆண்டில் 4.8 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. கையிருப்புக்களின்[1] மதிப்பீடுகள் 1963ம் ஆண்டில் ஓர் சிறு அதிகரிப்பைக் காட்டுகின்றன. கையிருப்புக்களில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பைச் சேர்த்துக் கணிக்கும் பொழுது 1963ம் ஆண்டின் மொத்த மூலதன ஆக்கம் 3.8 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

---

1. உணவு ஆணையாளரின் திணைக்களத்திலிருந்து கிடைக்கப்பெற்ற உணவுக் கையிருப்புக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

## அட்டவணை II அ-6

### நடைமுறைச்சந்தை விலைகளின்படி தனிப்பட்டோர் நுகர்ச்சிச் செலவின் அமைப்பு

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1961ல் இருந்து 1962ம் ஆண்டு | 1962ல் இருந்து 1963ம் ஆண்டு |
| **அ. பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள்** | | | | | | | | | |
| (i) அரிசியும், கோதுமைமாவும், சீனியும் .. .. | 490 | 488 | 522 | 545 | 531 | — 0.3 | + 7.0 | + 4.4 | — 2.6 |
| (ii) ஏனைய சொந்த நுகர்ச்சிப் பொருட்கள் .. .. | 1,328 | 1,425 | 1,196 | 1,206 | 1,180 | + 7.3 | —16.1 | + 0.9 | — 2.2 |
| (iii) சினைக்கொள் அல்லாத சேவைகள் .. .. .. | 178 | 152 | 137 | 128 | 130 | —14.5 | —10.0 | — 6.4 | + 1.9 |
| **மொத்தம் .. ..** | 1,995 | 2,065 | 1,854 | 1,879 | 1,841 | + 3.5 | —10.2 | + 1.3 | — 2.0 |
| **ஆ. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் சேவைகளும்** | | | | | | | | | |
| (i) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் | | | | | | | | | |
| அரிசி .. .. .. | 312 | 308 | 275 | 306 | 319 | — 1.5 | —10.6 | +11.2 | + 4.4 |
| தெங்கு உற்பத்திப் பொருட்கள் .. .. .. | 232 | 187 | 162 | 154 | 186 | —19.4 | —13.4 | — 4.8 | +20.3 |
| தேயிலை .. .. | 63 | 67 | 69 | 70 | 70 | + 7.5 | + 2.2 | + 1.7 | — 0.1 |
| ஏனைய உணவுப் பயிர்கள் .. | 398 | 433 | 473 | 473 | 483 | + 8.6 | + 9.4 | ... | + 2.1 |
| புகையிலை .. .. | 20 | 22 | 27 | 31 | 32 | +11.3 | +24.0 | +13.8 | + 2.9 |
| வெற்றிலையும் பாக்கும் .. | 46 | 50 | 50 | 46 | 48 | + 7.1 | + 1.8 | — 8.3 | + 4.5 |
| விறகு .. .. | 15 | 16 | 17 | 17 | 18 | + 3.9 | + 3.8 | + 3.0 | + 5.3 |
| கால்நடை .. .. | 174 | 168 | 184 | 181 | 190 | — 3.3 | + 9.3 | — 1.8 | + 5.0 |
| மீன் .. .. .. | 80 | 92 | 115 | 134 | 167 | +13.9 | +25.5 | +17.0 | +24.5 |
| ஏனைய விவசாயப் பொருட்களும், வனவியற் பொருட்களும் .. .. | 57 | 59 | 61 | 63 | 67 | + 4.6 | + 3.4 | + 2.6 | + 6.4 |
| கைத்தொழில் உற்பத்திகள் | 696 | 808 | 849 | 942 | 1,116 | +16.0 | + 5.2 | +10.9 | +18.5 |
| மொத்தம் .. .. | 2,093 | 2,208 | 2,282 | 2,416 | 2,695 | + 5.5 | + 3.4 | + 5.9 | +11.5 |
| (ii) குடியிருப்புக்களின் வாடகைகள் .. .. .. | 186 | 197 | 216 | 226 | 247 | + 5.9 | + 9.6 | + 4.3 | + 9.6 |
| (iii) போக்குவரத்து .. .. | 241 | 256 | 272 | 286 | 293 | + 6.2 | + 6.4 | + 4.9 | + 2.5 |
| (iv) சேவைகள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) | | | | | | | | | |
| தனியாட்களுக்கான நிதிச் சேவைகள் (அ) .. | 13 | 14 | 15 | 16 | 18 | + 8.5 | + 7.1 | + 8.0 | + 8.0 |
| பொழுது போக்கும், களியாட்டமும் .. .. | 24 | 25 | 26 | 27 | 28 | + 3.3 | + 3.2 | + 2.7 | + 3.4 |
| வீட்டுச் சேவைகள் .. | 200 | 203 | 209 | 218 | 226 | + 1.5 | + 3.1 | + 4.0 | + 3.7 |
| விடுதிகளும் போசனசாலைகளும் .. .. | 119 | 121 | 125 | 130 | 135 | + 1.5 | + 3.1 | + 4.0 | + 3.9 |
| தொழிற் சேவைகளும், நிலையச் சேவைகளும் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) (ஆ) | 61 | 61 | 61 | 61 | 61 | ... | ... | ... | ... |
| சொந்தச் சேவைகள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) (இ) .. .. | 50 | 51 | 52 | 54 | 57 | + 1.4 | + 3.2 | + 4.0 | + 4.6 |
| மொத்தம் .. .. | 467 | 475 | 488 | 506 | 523 | + 1.6 | + 2.8 | + 3.6 | + 3.5 |
| அரசாங்க உள்நாட்டுக் கொள்வனவுகளின் நீக்கம் .. | —110 | — 41 | —102 | —133 | —119 | | | | |
| **மகா மொத்தம் .. ..** | 2,878 | 3,095 | 3,157 | 3,301 | 3,639 | + 7.5 | + 2.0 | + 4.6 | +10.2 |
| **இ. இலங்கையில் வாசம் செய்யாதோரால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களினதும், சேவைகளினதும் நீக்கம் .. ..** | —195 | —169 | —162 | —170 | —171 | | | | |
| **மொத்த தனிப்பட்டோர் நுகர்ச்சி ..** | 4,678 | 4,991 | 4,849 | 5,010 | 5,309 | + 6.7 | — 2.9 | + 3.3 | + 6.0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

(அ) வங்கிகள், காப்புறுதிக் கூட்டுநிலையங்கள், ஏனைய நிதிநிலையங்கள் ஆகியவற்ருல் முயற்சித் தலங்களிலும் பிறிதான குடியானவர்களுக்கு அளித்த சேவைகளின் பெறுமானம்.

(ஆ) சொந்த மருத்துவ, சட்ட, கல்விச் சேவைகளாலும், இலாபத்தை நோக்கமற்றதாகக் கொண்ட தாபனங்களாலும் (மதம், பொதுநலத்தாபனங்கள், தொழிற் சங்கங்கள் ஆகியவைகள்) அளிக்கப்பட்ட சேவைகள்.

(இ) வண்ணுர், அம்பட்டர், சாஸ்திரீகர் ஆகியவர்களின் சேவைகள்.

நடைமுறைச்சந்தை விலைகளின்படி தனிப்பட்டோரின் நுகர்ச்சியில் ஏற்பட்ட செலவுகளின் விபரங்களை அட்டவணை II அ-6 காட்டுகின்றது. இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, கோதுமை மா, சீனி ஆகியவற்றின் மீதுள்ள

மொத்த நுகர்ச்சிச் செலவு, 1961ம் ஆண்டு முதல் அதிகரித்துக்கொண்டிருந்த பொழுதிலும், 1963ம் ஆண்டில் 2.6 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. இறக்குமதி செய்யப்பட்ட ஏனைய நுகர்ச்சிப் பொருட்களின் மீதுள்ள செலவு 2.2 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. அரிசி, கோதுமை மா, சீனி ஆகியவை அல்லாத ஏனைய நுகர்ச்சிப் பொருட்களின்மீதான செலவில் ஏற்பட்ட வீழ்ச்சி, 1962ம், 1963ம் ஆண்டுகளில் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகளையே சாரும். சினைக்கொள் அல்லாத சேவைகளையும் அடக்கிய மொத்த இறக்குமதிகளின்மீது ஏற்பட்ட செலவு 1963ம் ஆண்டில் 2.0 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது.

அட்டவணை II அ-7

நடைமுறைச் சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1959 ல் இருந்து 1960 ம் ஆண்டு | 1960 ல் இருந்து 1961 ம் ஆண்டு | 1961 ல் இருந்து 1962 ம் ஆண்டு | 1962 ல் இருந்து 1963 ம் ஆண்டு |
| **அ. தனிப்பட்டோர் துறையும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் ..** | | | | | | | | | |
| (i) மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | | | | | | | | | |
| பயிர்நடுகையும், மாற்றுநடுகையும் .. | 62 | 63 | 63 | 64 | 61 | + 1.8 | ... | + 1.3 | — 5.5 |
| கட்டட வேலையும், ஏனைய சில கட்டட ஆக்கத் தொழிலும் .. | 336 | 341 | 320 | 342 | 262 | + 1.5 | — 6.0 | + 6.8 | —23.5 |
| இயந்திரங்களும், பொறிகளும் .. | 119 | 77 | 113 | 113 | 154 | —35.1 | +47.5 | — 0.2 | +36.0 |
| போக்குவரத்து .. | 153 | 109 | 85 | 92 | 63 | —28.9 | —21.8 | + 8.4 | —31.7 |
| இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப் பொருட்கள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) .. | 64 | 59 | 55 | 57 | 59 | — 7.5 | — 7.4 | + 3.1 | + 3.5 |
| மொத்தம் | 733 | 649 | 637 | 668 | 598 | —11.5 | — 1.9 | + 4.9 | —10.5 |
| (ii) கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் .. | | | | | | | | | |
| தேயிலை .. | + 1 | — 13 | — 3 | — 37 | — 8 | | | | |
| இரப்பர் .. | — 3 | — 27 | + 19 | + 3 | + 20 | | | | |
| கால்நடை .. | + 13 | + 9 | ... | — 7 | ... | | | | |
| மொத்தம் | + 12 | — 31 | + 16 | — 41 | + 12 | | | | |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் .. | 745 | 618 | 652 | 627 | 610 | —17.0 | + 5.5 | — 3.9 | — 2.7 |
| **ஆ. அரசாங்கமும், அரசாங்க முயற்சிகளும்** | | | | | | | | | |
| (i) மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் .. | 336 | 317 | 341 | 364 | 384 | — 5.6 | + 7.6 | + 6.6 | + 5.6 |
| (ii) கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் .. | | | | | | | | | |
| இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, கோதுமை மா, சீனி ஆகியவை .. | +13 | — 26 | — 12 | — 2 | — 10 | | | | |
| உத்தரவாத விலைத்திட்ட நெல் .. | — 35 | + 10 | + 65 | + 45 | + 10 | | | | |
| சாராயம் .. | — 1 | ... | — 2 | ... | ... | | | | |
| மொத்தம் | — 23 | — 17 | + 52 | + 43 | ... | | | | |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் .. | 313 | 300 | 393 | 407 | 384 | — 4.1 | +30.8 | + 3.6 | — 5.6 |
| **இ. சகல துறைகளும்** | | | | | | | | | |
| (i) மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் .. | 1,069 | 966 | 978 | 1,031 | 982 | — 9.7 | + 1.2 | +5.5 | — 4.8 |
| (ii) கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் .. | — 11 | — 47 | + 67 | + 2 | + 12 | | | | |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் .. | 1,058 | 918 | 1,045 | 1,033 | 994 | —13.2 | +13.8 | — 1.1 | — 3.8 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

இறக்குமதிகளின் மீதான தனிப்பட்டோரின் நுகர்ச்சிச் செலவு வீழ்ச்சியுற்ற பொழுதிலும், சந்தைவிலைகளின்படி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மீதான செலவு 11.5 சதவீதத்தால் அதிகரித்ததின் பயனாக, தனிப்பட்டோரின் மொத்த நுகர்ச்சிச் செலவு அதிகரித்தது. தெங்குப் பொருட்களின் மீதான செலவு, 20.3 சதவீதத்தால் அதிகரித்தமை தேங்காய்களினதும், தேங்காயெண்ணெயினதும் சில்லறை விலைகள் அதிகரித்தமையைப் பிரதிபலித்தது. மீன்களின் மீதான செலவும் 24.5 சதவீதத்தால் உயர்ந்தது.

தனிப்பட்டோர் துறையிலும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் ஏற்பட்ட மூலதன ஆக்கத்தின் பகுப்பை அட்டவணை II அ-7 அளிக்கின்றது. தனிப்பட்டோர் துறையிலும், கூட்டுத்தாபனங்களிலும் ஏற்பட்ட நிலையான மூலதன ஆக்கம் வீழ்ச்சியடைந்திருப்பது, பிரதானமாக போக்குவரத்துச் சாதனங்களிலும், கட்டடம் ஏனைய கட்டட ஆக்கம் ஆகிய தொழில்களிலும் ஏற்பட்ட முதலீடுகள் வீழ்ச்சியடைந்தமையோடு சம்பந்தப்பட்டுள்ளதென்பது தெளிவாகின்றது. நிலையான மூலதன ஆக்கத்தின் மதிப்பீடுகள் பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப் பொருட்களின் அடிப்படையைக் கொண்டே கணிக்கப்பட்டுள்ளன. 1962ம், 1963ம் ஆண்டுகளில் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் பயனாக 1963ம் ஆண்டில் கட்டடப் பொருட்களினதும், போக்குவரத்துச் சாதனங்களினதும் இறக்குமதிகள் பெருமளவில் வீழ்ச்சியுற்றன. இப்பொருட்களின் இறக்குமதிகள் வீழ்ச்சியுற்றதன் விளைவாக, கட்டட ஆக்கத்தொழிலிலும், போக்குவரத்திலும் ஏற்பட்ட மூலதன ஆக்கம் முறையே 23.5 சதவீதத்தாலும், 31.7 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றன. எனினும், இயந்திரங்கள் பொறிகளின் பேரில் ஏற்பட்ட மூலதன ஆக்கம் 36.0 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அரசாங்கத்துறையில் ஏற்பட்ட நிலையான மூலதன ஆக்கம் சம்பந்தமான தரவுகளையும், அரசாங்கத்துறையிலும், தனிப்பட்டோர் துறையிலும் உள்ள கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களின் தரவுகளையும் அட்டவணை II அ-7 அளிக்கின்றது. அரசாங்க முயற்சித்தலங்கள் உட்பட்ட அரசாங்கத்துறையினது மொத்த நிலையான மூலதன ஆக்கம் 1962ம் ஆண்டு 6.6 சதவீதத்தால் அதிகரித்ததற்கெதிராக 1963ம் ஆண்டு 5.6 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்துள்ளது. அரசாங்க முயற்சிகளில் ஏற்பட்ட நிலையான மூலதன ஆக்கம் முந்தைய ஆண்டில் 13.1 சதவீதத்தால் அதிகரித்ததிற்கெதிராக இவ்வாண்டில் 22.8 சதவீதத்தால் உயர்ந்துள்ளது. அரசாங்க முயற்சிகள் அல்லாத ஏனைய அரசாங்கத்துறையின் நிலையான மூலதன ஆக்கம், 1962ம் ஆண்டில் 4.2 சதவீதத்தால் அதிகரித்தெனினும் 1963ம் ஆண்டில் 1.2 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது.

மேலேயுள்ள அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளபடி, 1963ம் ஆண்டில் அரசாங்கத்துறையின் (தெரியக்கூடிய) கையிருப்புக்கள் 1 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தமைக்குள்ள காரணம், இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, கோதுமை மா, சீனி ஆகியவற்றின் கையிருப்புக்கள் 95 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றமையும், உத்தரவாத விலைத்திட்ட நெற் கையிருப்புக்கள் 96* இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தமையுமேயாகும். எனினும் தனிப்பட்டோர் துறையின் கையிருப்புக்கள், பிரதானமாக ஏற்றுமதிப் பொருட்களின் கையிருப்புக்கள், 120 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்துள்ளன. தனிப்பட்டோர் துறையினதும், அரசாங்கத்துறையினதும் மொத்தக் கையிருப்புக்கள் 121 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன.

---

*தற்காலிகமானவை.

### பொருள்வளங்களும் அவற்றின் பாவிப்பும்

மொத்த தேசிய உற்பத்திக்கு அதன் பிரதான கூறுகள் உதவிய பங்கு களைப்பற்றிய விளக்கமும், நுகர்ச்சி, மூலதன ஆக்கம் எனப் பெரும்படியாகப் பகுக்கப்பட்ட மொத்த தேசிய செலவைப் பற்றிய விளக்கமும் முந்தைய பக்கங்களிற் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை II அ-8**

**நடைமுறைச் சந்தை விலைகளின்படி பொருள்வளங்களும் அவற்றின் பாவிப்பும்**

| | 10 இலட்சம் ரூபாய்களில் | | | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1961ல் இருந்து 1962ம் ஆண்டு | 1962ல் இருந்து 1963ம் ஆண்டு |
| **அ. பொருள்வளங்கள்** | | | | | | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி (1) .. .. | 6,457 | 6,622 | 6,755 | 6,918 | 7,214 | + 2.6 | + 2.0 | + 2.4 | + 4.2 |
| பொருட்களினதும் சினைக் கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள் | 2,176 | 2,209 | 1,972 | 2,070 | 2,014 | + 1.5 | —10.7 | + 5.0 | — 2.7 |
| **மொத்தம் .. ..** | **8,633** | **8,831** | **8,727** | **8,988** | **9,228** | **+ 2.3** | **— 1.2** | **+ 3.0** | **+ 2.6** |
| **ஆ. பாவிப்பு** | | | | | | | | | |
| நுகர்ச்சி .. .. | 5,559 | 5,902 | 5,775 | 5,990 | 6,319 | + 6.2 | — 2.2 | + 3.7 | + 5.5 |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் .. .. | 1,058 | 918 | 1,045 | 1,033 | 994 | —13.2 | +13.8 | — 1.1 | — 3.8 |
| பொருட்களினதும் சினைக் கொள் அல்லாத சேவைகளினதும் ஏற்றுமதிகள் | 2,016 | 2,011 | 1,907 | 1,966 | 1,914 | — 0.2 | — 5.2 | + 3.1 | — 2.6 |
| **மொத்தம் .. ..** | **8,633** | **8,831** | **8,727** | **8,988** | **9,228** | **+ 2.3** | **— 1.2** | **+ 3.0** | **+ 2.6** |

மூலம்: இலங்கை மகா வங்கி.

(1) மான்யங்களும் உட்பட்ட நிகர மறைமுக வரிகளுக்கும் (விடயம் 2, அட்டவணை II அ-5) கையிருப்புக்களில் ஏற்பட்ட மறைமுக மாற்றங்களுக்கும், புள்ளிவிபரத் தவறுகளுக்கும் (விடயம் 13, அட்டவணை II அ-5) திருத்தியமைக்கப்பட்டு, மொத்தத் தேசிய செலவிலுள்ள நுகர்ச்சியினதும், மூலதன ஆக்கத்தினதும் மதிப்பீடுகளுடன் ஒத்துவரச்செய்யப் பட்டுள்ள அட்டவணை II அ-2ல் உள்ள விடயம் III இதுவாகும்.

தேசிய உற்பத்தி, செலவு ஆகியனவற்றிலுள்ள சில குறிப்பிட்ட அம்சங்களை வெளிப்படையாகக் காட்டும் பொருட்டு முன்பு கொடுக்கப்பட்ட தரவுகள் பின்வரும் பக்கங்களில் பாகுபடுத்தி ஆராயப்பட்டுள்ளன.

பொருளாதாரத்திற்குக் கிடைக்கக்கூடிய மொத்தப் பொருள்வளங் களையும், இப்பொருள்வளங்கள் பாவிக்கப்பட்ட விதத்தையும் அட்டவணை II அ-8 காட்டுகின்றது. ஒரு தேசத்திற்குக் கிடைக்கக்கூடிய பொருள் வளங்கள் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களையும் சேவைகளையும், ஏனைய தேசங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களையும் கொண்ட தாகவிருக்கும். இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் ஒப்பியல் முக்கியத் துவம் ஒரு நாட்டின் தன் நிறைவான அளவின் தன்மையைப் பொறுத்துத் தேசத்திற்குத் தேசம் வேறுபடுகின்றது. இலங்கையைப் பொறுத்த அளவில், மொத்தப் பொருள்வளங்களில் இறக்குமதிகளின் பங்கு 25 சதவீதமாக உள்ளது.

மொத்தப் பொருள்வளங்கள் 1963ம் ஆண்டில் 2.6 சதவீதத்தால் அதிகரித்திருப்பது அட்டவணை II அ-8ல் இருந்து தெளிவாகின்றது. 1963ம் ஆண்டில் இறக்குமதிகள் உண்மையாக 2.7 சதவீதத்தால் வீழ்ச்சி யுற்ற பொழுதிலும், உற்பத்தியின் மூலம் கிடைத்த பொருள்வளங்கள் 4.2 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. பொருள்வளங்களின் பாவிப்பை உற்று நோக்கும் பொழுது, நுகர்ச்சிச் செலவு 5.5 சதவீதத்தால் அதிகரித்திருக் கையில், உள்நாட்டு மூலதன ஆக்கமும், ஏற்றுமதிகளும் முறையே 3.8 சத வீதத்தாலும், 2.6 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றன.

## அட்டவணை II அ-9

### நடைமுறைச்சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டுச் செலவும், பொருள்வளங்களும்

| | 1959 | | 1960 | | 1961 | | 1962 | | 1963 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 10 இலட்சம் ரூபாய்களில் | (7)ம் வரிசையின் சதவீதம் | 10 இலட்சம் ரூபாய்களில் | (7)ம் வரிசையின் சதவீதம் | 10 இலட்சம் ரூபாய்களில் | (7)ம் வரிசையின் சதவீதம் | 10 இலட்சம் ரூபாய்களில் | (7)ம் வரிசையின் சதவீதம் | 10 இலட்சம் ரூபாய்களில் | (7)ம் வரிசையின் சதவீதம் |
| 1. நுகர்ச்சிச் செலவு: தனிப்பட்டோர் .. | 4,678 | 72.9 | 4,991 | 75.9 | 4,849 | 72.2 | 5,010 | 72.9 | 5,309 | 74.1 |
| 2. நுகர்ச்சிச் செலவு: அரசாங்கம் .. | 881 | 13.7 | 911 | 13.8 | 926 | 13.8 | 979 | 14.2 | 1,011 | 14.1 |
| 3. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்: தனிப்பட்டோர் துறையும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் .. | 745 | 11.6 | 618 | 9.4 | 652 | 9.7 | 627 | 9.1 | 610 | 8.5 |
| 4. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்: அரசாங்க முயற்சிகள் .. 5. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்: அரசாங்கம் .. | 313 | 4.9 | 300 | 4.6 | 393 | 5.9 | 407 | 5.9 | 384 | 5.4 |
| 6. மொத்த உள்நாட்டுச் செலவு .. | 6,617 | 103.1 | 6,820 | 103.7 | 6,820 | 101.5 | 7,023 | 102.2 | 7,313 | 102.1 |
| 7. மொத்த தேசிய உற்பத்தி (திருத்தியமைக்கப்பட்டது)* .. | 6,420 | 100·0 | 6,578 | 100·0 | 6,716 | 100·0 | 6,872 | 100·0 | 7,162 | 100·0 |
| 8. (7)ல் இருந்து (6) மேலதிகமாய்க் கொண்டுள்ளதைப் பின்வரும் விடயங்கள் நிரப்புகின்றன:— | | | | | | | | | | |
| (அ) வெளிநாட்டிலுள்ள நிகர முதலீடுகளின் கரைவு .. | 208 | | 221 | | 94 | | 144 | | 146 | |
| (ஆ) சர்வதேச நன்கொடைகளினதும், மாற்றங்களினதும் நிகர வருமானங்கள் .. | — 12 | | + 22 | | + 11 | | + 7 | | + 5 | |
| (அ) + (ஆ) .. | 196 | | 243 | | 105 | | 151 | | 151 | |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*இவ் அட்டவணையின் ஏனைய விடயங்கள் யாவும் மொத்த தேசிய செலவு பற்றிய அட்டவணை II அ-4ல் இருந்து எடுக்கப்பட்டமையின் இவ் எண்தொகையும் அவற்றுடன் ஒரே சீராக விளங்கும்படியாக, அட்டவணை II அ-5ன் விடயம் 3ல் காட்டப்பட்டுள்ள மொத்த தேசிய உற்பத்தியின் எண்தொகைகளை, அவ் அட்டவணையின் 13ம் விடயத்தால் திருத்தியமைத்து இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

மொத்த உள்நாட்டுச் செலவின் கூறுகளும் அவை நிதியீட்டப்பட்ட விதமும் அட்டவணை II அ-9ல் காட்டப்பட்டுள்ளன. மொத்தத் தேசிய செலவின் முழுத்தொகையை, நடைமுறையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்வளங்களினுல் அதாவது, மொத்தத் தேசிய உற்பத்தியினுல் எவ்வளவு தூரம் நிதியீட்டம் செய்து கொள்ள முடிந்தது என்பதை இவ் அட்டவணையிலுள்ள தரவுகள் காட்டுகின்றன. 1959ம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் சந்தை விலைகளின்படியான மொத்தத் தேசிய உற்பத்தி, மொத்த உள்நாட்டுச் செலவிலும் பார்க்கச் சிறிது தாழ்ந்ததாக இருந்ததும், கிட்டத்தட்ட இக்குறைவுகள் முழுவதும் வெளிநாடுகளிலுள்ள முதலீட்டழிப்பினுலேயே ஈடுசெய்யப்பட்டதென்பதும் இவ் அட்டவணையிலிருந்து தெளிவாகின்றது.

## அட்டவணை II அ-10

### மொத்த உள்நாட்டுச் செலவு விடயங்களில் இறக்குமதிகளின் பங்கு

| | 1959 | | | | 1960 | | | | 1961 | | | | 1962 | | | | 1963 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தனிப்பட்டோர் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் | தனிப்பட்டோர் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் | தனிப்பட்டோர் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் | தனிப்பட்டோர் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் | தனிப்பட்டோர் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் |
| 1. சந்தை விலைகளின்படியான செலவு (பத்து இலட்சம் ரூபாய்களில்) .. .. | 4,678 | 881 | 1,069 | —11 | 4,991 | 911 | 966 | —47 | 4,849 | 926 | 978 | +67 | 5,010 | 979 | 1,031 | + 2 | 5,309 | 1,011 | 982 | + 12 |
| 2. கொ. கா. க. விலைகளில் இறக்குமதிகளின் பங்கு:— | | | | | | | | | | | | | | | | | | | | |
| (அ) தொகை (பத்து இலட்சம் ரூபாய்களில் .. | 1,426 | 82 | 365 | +13 | 1,365 | 120 | 336 | —26 | 1,166 | 65 | 306 | —12 | 1,104 | 52 | 310 | — 2 | 985 | 47 | 292 | — 10 |
| (ஆ) சதவீதம் .. | 30·5 | 9·3 | 34·1 | | 27·3 | 13·2 | 34·8 | | 24·0 | 7·0 | 31·3 | | 22·0 | 5·3 | 30·1 | | 18·6 | 4·6 | 29·7 | |
| 3. சந்தை விலைகளில்* இறக்குமதிகளின் பங்கு .. | | | | | | | | | | | | | | | | | | | | |
| (அ) தொகை (பத்து இலட்சம் ரூபாய்களில்) .. | 1,995 | 84 | 565 | +15 | 2,065 | 122 | 519 | —28 | 1,855 | 67 | 472 | —14 | 1,879 | 54 | 478 | — 4 | 1,841 | 49 | 459 | — 12 |
| (ஆ) சதவீதம் .. | 42·6 | 9·5 | 52·9 | | 41·4 | 13·4 | 53·7 | | 38·3 | 7·2 | 48·3 | | 37·5 | 5·5 | 46·4 | | 34·7 | 4·8 | 46·7 | |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*அரசாங்க (குடியியலும், பாதுகாப்பிற்குமான) இறக்குமதிகளும், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களும், கொள்விலை, காப்புறுதி, கப்பற்கூலி என்ற அடிப்படை விலைகளில் மதிக்கப்பட்டுள்ளன. ஏனைய வணிகப் பொருட்களின் இறக்குமதிகள் யாவும் சில்லறை விலைகளில் மதிக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை II அ-11

### நடைமுறைச்சினைக்கொள் விலைகளின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி—கைத்தொழில் மூலங்களின்படி

பத்து இலட்சம் ரூபாய்களில்

| கைத்தொழில் | 1959 தொகை | 1959 சதவீதம் | 1960 தொகை | 1960 சதவீதம் | 1961 தொகை | 1961 சதவீதம் | 1962 தொகை | 1962 சதவீதம் | 1963 தொகை | 1963 சதவீதம் | சதவீதமாற்றம் 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | சதவீதமாற்றம் 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | சதவீதமாற்றம் 1961ல் இருந்து 1962ம் ஆண்டு | சதவீதமாற்றம் 1962ல் இருந்து 1963ம் ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| I. விவசாயமும், வனவியலும், வேட்டையாடுதலும், மீன்பிடித்தலும்* .. .. | 2,763 | 47 | 2,872 | 47 | 2,857 | 46 | 2,907 | 45 | 2,952 | 44 | + 3·9 | — 0·5 | + 1·8 | + 1·5 |
| II. சுரங்கத்தொழிலும் பார்க்குழித்தொழிலும் | 11 | .. | 11 | .. | 11 | .. | 12 | .. | 11 | .. | + 6·7 | — 4·5 | +10·3 | — 6·8 |
| III. தயாரிப்புகள் (கட்டட ஆக்கப் பொருட்களைத் தவிர்த்து) .. .. | 271 | 5 | 317 | 5 | 353 | 6 | 417 | 7 | 498 | 7 | +17·0 | +11·1 | +18·3 | +19·4 |
| IV. கட்டட ஆக்கத் தொழில் (கட்டட ஆக்கப் பொருட்களையும் சேர்த்து) .. .. | 384 | 7 | 349 | 6 | 385 | 6 | 429 | 7 | 438 | 6 | — 9·1 | +10·3 | +11·4 | + 2·1 |
| V. போக்குவரத்தும், களஞ்சியப்படுத்துதலும் செய்தி அறிவிப்பும்... .. .. | 470 | 8 | 512 | 8 | 498 | 8 | 523 | 8 | 555 | 8 | + 8·9 | — 2·7 | + 5·0 | + 6·1 |
| VI. மொத்த வியாபாரமும், சில்லறை வியாபாரமும் .. .. .. | 647 | 11 | 647 | 11 | 624 | 10 | 662 | 10 | 760 | 11 | ... | — 3·6 | + 6·1 | +14·8 |
| VII. வங்கித் தொழிலும், காப்புறுதியும், ஏனைய நிதித் தொழில்களும் .. .. | 48 | 1 | 52 | 1 | 56 | 1 | 59 | 1 | 64 | 1 | + 8·6 | + 7·7 | + 5·7 | + 7·6 |
| VIII. குடியிருப்புக்களின் உடமை .. .. | 169 | 3 | 178 | 3 | 196 | 3 | 205 | 3 | 223 | 3 | + 5·9 | + 9·9 | + 4·5 | + 8·9 |
| IX. அரசபரிபாலனமும், பாதுகாப்பும் .. | 387 | 7 | 402 | 7 | 403 | 7 | 444 | 7 | 450 | 7 | + 3·9 | + 0·2 | +10·2 | + 1·4 |
| X. சேவைகள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) | | | | | | | | | | | | | | |
| (அ) அரசாங்க மருத்துவ, சுகாதார, கல்வி, ஒலிபரப்பு, வானமண்டல சாஸ்திர சேவைகள் .. .. .. | 315 | 5 | 353 | 6 | 356 | 6 | 348 | 5 | 352 | 5 | +12·0 | + 1·0 | — 2·3 | + 1·3 |
| (ஆ) ஏனைய சகல சேவைகளும்.. .. | 426 | 7 | 432 | 7 | 443 | 7 | 458 | 7 | 476 | 7 | + 1·3 | + 2·7 | + 3·4 | + 3·8 |
| மொத்தம் | 741 | 13 | 784 | 13 | 799 | 13 | 806 | 13 | 828 | 12 | + 5·9 | + 1·9 | + 0·9 | + 2·7 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | 5,891 | 100 | 6,124 | 100 | 6,182 | 100 | 6,464 | 100 | 6,779 | 100 | + 4·0 | + 0·9 | + 4·6 | + 4·9 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*விவசாய ஏற்றுமதிப் பொருட்களைப் பதப்படுத்துதலும் உட்பட.

சந்தை விலைகளின்படி 1962ம், 1963ம் ஆண்டுகளில் மொத்த உள் நாட்டுச் செலவு, மொத்த தேசிய உற்பத்தியிலும் பார்க்க முறையே 2.2 சதவீதத்தாலும், 2.1 சதவீதத்தாலும் கூடுதலாக இருந்தது. 1962ம் ஆண்டில் இம்மிகை, 1440 இலட்சம் ரூபாய்கள் கொண்ட நிகர வெளி நாட்டிலுள்ள முதலீட்டழிப்பினாலும், 70 இலட்சம் ரூபாய்கள் கொண்ட சர்வதேச நன்கொடைகளினதும், மாற்றங்களினதும் நிகர வருமானங்களி னாலும் ஈடுசெய்யப்பட்டது. 1963ம் ஆண்டில் நிகர முதலீட்டழிப்பு 1460 இலட்சம் ரூபாய்களாகவும், சர்வதேச நன்கொடைகளினதும் மாற்றங்களி னதும் நிகர வருமானங்கள் 50 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கின. நுகர்ச்சிக்கும் மூலதன ஆக்கத்திற்கும் இடையே பங்கிடப்பட்டுள்ள செல வைத் திருப்பி நோக்கும் பொழுது 1962ம் ஆண்டு மொத்த தேசிய உற்பத்தி யில் 87.1 சதவீதமான தொகை நுகர்ச்சிக்கும், 15.0 சதவீதமான தொகை மூலதன ஆக்கத்திற்கும் சென்றன என்பதும், 1963ம் ஆண்டு மொத்த தேசிய உற்பத்தியில் 88.2 சதவீதமான தொகை நுகர்ச்சிக்கும், 13.9 சதவீதமான தொகை மூலதன ஆக்கத்திற்கும் சென்றனவென்பதும் இவ்வட்டவணை யிலிருந்து தெளிவாகின்றன.

கொள்விலை, காப்புறுதி, கப்பற்கூலி என்ற அடிப்படை விலைகளிலும், சந்தை விலைகளிலும், அரசாங்க நுகர்ச்சி, தனிப்பட்டோர் நுகர்ச்சி, மொத்த நிலையான மூலதன ஆக்கம் ஆகியனவற்றின் இறக்குமதியடக்கத்தை அட்ட வணை II அ-10 காட்டுகின்றது. கொள்விலை, காப்புறுதி, கப்பற்கூலி என்ற அடிப்படைப் பெறுமானத்திலோ அல்லது சந்தைப் பெறுமானத் திலோ, இவ்வகுப்புகள் ஒவ்வொன்றினதும் செலவின் இறக்குமதியடக்கம் 1959ம் ஆண்டிலிருந்து 1963ம் ஆண்டுவரை வீழ்ச்சியடைந்திருப்பது இவ் வட்டவணையிலிருந்து தெளிவாகின்றது. இவ்வகையில் கொள்விலை, காப் புறுதி, கப்பற்கூலி என்ற அடிப்படைப் பெறுமானத்திலுள்ள தனிப்பட் டோர் நுகர்ச்சிச்செலவின் இறக்குமதியடக்கம், 1959ம் ஆண்டிலிருந்த 30.5 சதவீதத்திலிருந்து 1962ம் ஆண்டு 22.0 சதவீதத்திற்கும், 1963ம் ஆண்டு மேலும் 18.6 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது. சந்தை விலை களின்படி இது 1959ம் ஆண்டிலிருந்த 42.6 சதவீதத்திலிருந்து, 1962ம் ஆண்டு 37.5 சதவீதத்திற்கும், 1963ம் ஆண்டு 34.7 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது. அதேபோல கொள்விலை, காப்புறுதி கப்பற்கூலி என்ற அடிப்படைப் பெறுமானங்களிலுள்ள நிலையான மூலதன ஆக்கத்தின் இறக்கு மதியடக்கம், 1959ம் ஆண்டிலிருந்த 34.1 சதவீதத்திலிருந்து 1962ம் ஆண்டு 30.1 சதவீதத்திற்கும் 1963ம் ஆண்டு 29.7 சதவீதத்திற்கும் வீழ்ச்சியுற்றது. சந்தைப் பெறுமானங்களின்படி இது 1959ம் ஆண்டிலிருந்த 52.9 சதவீதத் திலிருந்து, 1962ம் ஆண்டு 46.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றதெனினும், 1963ம் ஆண்டு 46·7 சதவீதத்திற்கு சிறிது உயர்ந்தது.

### கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி

முன்னர் கொடுக்கப்பட்டுள்ள மொத்த உள்நாட்டு உற்பத்தியின் புள்ளி விபரங்கள், பொருளாதாரத்தின் கைத்தொழில் அமைப்பைக் காட்டத்தக்க வாறு பிரித்து அமைத்து, அட்டவணை II அ-11ல் காட்டப்பட்டுள்ளன. 1962ம் ஆண்டுக்கும் 1963ம் ஆண்டுக்குமிடையில் (கட்டட ஆக்கப் பொருட் களையும் சேர்த்த) கட்டட ஆக்கத் தொழிலின் பங்கு 7 சதவீதத்திலிருந்து 6 சதவீதத்திற்குச் சிறிது வீழ்ச்சியடைந்ததைத் தவிர, 1963ம் ஆண்டில் பொருளாதாரத்தின் கைத்தொழில் அமைப்பு முந்தைய ஆண்டுகளில் இருந்த தைப்போலவே இருந்தது. 1960ம் ஆண்டில் 47 சதவீதமாக இருந்த விவ சாயத்துறையின் பங்கு 1961ம் ஆண்டு 46 சதவீதத்திற்கும், 1962ம் ஆண்டு 45 சதவீதத்திற்கும், 1963ம் ஆண்டு 44 சதவீதத்திற்கும் வீழ்ச்சியுற்றது.

1963ம் ஆண்டில், தயாரிப்புகள், மொத்த வியாபாரம், சில்லறை வியாபாரம், குடியிருப்புக்களின் உடமை, வங்கித்தொழில், காப்புறுதி, நிதி ஆகியனவற்றின் உற்பத்திப் பெறுமானங்கள் உயர்ந்த விகிதங்களால் அதிகரித்திருப்பதையும் அட்டவணை II அ-11 காட்டுகின்றது.

**உண்மை உற்பத்தியும், உண்மை வருமானமும், உண்மைச் செலவும்**

நிலையான 1959ம் ஆண்டு விலைகளின்படி மொத்த தேசிய உற்பத்தியின் தற்காலிகமான மதிப்பீடுகளை அட்டவணை II அ-12 காட்டுகின்றது. 1960ம் ஆண்டுக்குப்பின் முதல்முறையாக 1963ம் ஆண்டில் ஏற்றுமதிகளின் உண்மைப் பெறுமானத்தில் 3.9 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டது. எனினும் கையிருப்புக்களின் பெறுமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பைச் சேர்த்துக் கணிக்கும் பொழுது நிலையான விலைகளின்படி, ஏற்றுமதித்துறையின் நிகர உற்பத்தி 1.9 சதவீதத்தால் மட்டுமே வீழ்ச்சியடைந்துள்ளது.

**அட்டவணை II அ-12**

**நிலையான 1959ம் ஆண்டுச் சினைக்கொள் விலைகளின்படி மொத்த தேசிய உற்பத்தி**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | நிலையான 1959ம் ஆண்டுப் பெறுமானங்கள் தொகை | | | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1961ல் இருந்து 1962ம் ஆண்டு | 1962ல் இருந்து 1963ம் ஆண்டு |
| **I. ஏற்றுமதிக்கான உற்பத்தி** | | | | | | | | | |
| (i) உள்நாட்டு ஏற்றுமதிகள்: ஏற்றுமதி விலைப்பெறுமானம் | 1,692 | 1,778 | 1,862 | 1,995 | 1,917 | + 5.1 | + 4.7 | + 7.2 | — 3.9 |
| கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களின் பெறுமானம் | — 2 | — 37 | + 17 | — 37 | + 15 | | | | |
| இறக்குமதி செய்து உபயோகித்த பொருட்களின் நீக்கம் (சந்தைப் பெறுமானம்) .. | —124 | —120 | —133 | —157 | —163 | | | | |
| ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் விநியோகச் செலவு நீக்கம் .. .. | —104 | —108 | —110 | —118 | —115 | | | | |
| நிகர உற்பத்தி .. .. | 1,462 | 1,513 | 1,635 | 1,684 | 1,653 | + 3.5 | + 8.1 | + 3.0 | — 1.8 |
| (ii) திருப்பி ஏற்றுமதி செய்யப்பட்டவைகள்: கூட்டப்பட்ட பெறுமானம் .. .. | 3 | 2 | 2 | 2 | 1 | —20.0 | + 5.0 | —14·3 | —38·9 |
| **ஏற்றுமதிக்கான உற்பத்தி: நிகர** | **1,465** | **1,515** | **1,638** | **1,686** | **1,655** | + 3.4 | + 8.1 | + 2.9 | — 1.9 |
| **II. உள்நாட்டுப் பாவனைக்கான உற்பத்தி (நிகர உற்பத்தி)** .. | | | | | | | | | |
| (i) நெல், தேயிலை, தெங்கு உற்பத்திப் பொருட்கள் ஆகியவை | 642 | 723 | 731 | 788 | 806 | +12.6 | + 1.1 | + 7.8 | + 2.2 |
| (ii) அரசாங்கம் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) .. | 702 | 755 | 759 | 792 | 802 | + 7.6 | + 0.6 | + 4.3 | + 1.3 |
| (iii) ஏனைய பொருட்களும் சேவைகளும் .. .. .. | 3,082 | 3,129 | 3,173 | 3,277 | 3,399 | + 1.6 | + 1.4 | + 3.3 | + 3.8 |
| **மொத்தம்** .. .. | 4,426 | 4,607 | 4,663 | 4,857 | 5.007 | + 4.1 | + 1.2 | + 4.2 | + 3.1 |
| **III. மொத்த உள்நாட்டு உற்பத்தி** .. | 5,891 | 6,122 | 6,300 | 6,543 | 6,662 | + 3.9 | + 2.9 | + 3.8 | + 1.8 |
| **IV. வெளிநாட்டிலிருந்து நிகரச் சினைவருமானம்** .. .. | — 37 | — 44 | — 40 | — 50 | — 51 | | | | |
| **V. மொத்த தேசிய உற்பத்தி** .. | 5,854 | 6,078 | 6,260 | 6,493 | 6,611 | + 3.8 | + 3.0 | + 3.7 | + 1.8 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

உள்நாட்டுத்துறையில், நெல், தேயிலை, தெங்கு உற்பத்திப் பொருட்கள் ஆகியனவற்றில் முந்தைய ஆண்டு ஏற்பட்ட 7.8 சதவீத விரிவிற்கெதிராக இவ்வாண்டில் 2.2 சதவீத விரிவு மட்டுமே ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்துறையில் 1.3 சதவீதத்தால் அதிகரித்த உண்மை உற்பத்தி, 1962ம் ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பிலும் பார்க்கத் தாழ்ந்ததாகும். எனினும் ஏனைய உள்நாட்டுத்துறையில் 1962ம் ஆண்டு ஏற்பட்ட 3.3 சதவீத அதிகரிப்பிற்கு எதிராக 1963ம் ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பு 3.8 சதவீதமாகும்.

உண்மை நியதியின்படியான மொத்த தேசிய உற்பத்தியில் 1962ம் ஆண்டு ஏற்பட்ட 3.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1963ம் ஆண்டில் இவ்வதிகரிப்பு 1.8 சதவீதமாக விளங்கியது. 1963ம் ஆண்டு உண்மை உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு விகிதம், குடிசனத்தொகை வளர்ச்சி விகிதத்திலும் தாழ்ந்ததாகவே விளங்குகின்றது. 1963ம் ஆண்டில் குடிசனத்தொகை 2.6* சதவீதத்தால் அதிகரித்ததெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே 1962ம் ஆண்டில் 622 ரூபாய்களாக விளங்கிய சராசரி ஆளுக்கான உண்மை உற்பத்தி 1963ம் ஆண்டு 617 ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றது. தனியாளுக்கான உண்மை உற்பத்தியில் 1962ம் ஆண்டு ஏற்பட்ட 1.0 சதவீத அதிகரிப்புக்கு எதிராக, 1963ம் ஆண்டில் 0.8 சதவீதம் கொண்ட வீழ்ச்சியேற்பட்டது.

## அட்டவணை II அ-13

## உண்மைத் தேசிய வருமானமும் செலவும்

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1959 ல் இருந்து 1960 ம் ஆண்டு | 1960 ல் இருந்து 1961 ம் ஆண்டு | 1961 ல் இருந்து 1962 ம் ஆண்டு | 1962 ல் இருந்து 1963 ம் ஆண்டு |
| 1. நிலையான 1959ம் ஆண்டுச் சினைக்கொள் விலைகளின்படி மொத்த தேசிய உற்பத்தி | 5,854 | 6,078 | 6,260 | 6,493 | 6,611 | + 3.8 | + 3.0 | + 3.7 | +1.8 |
| 2. ஏற்றுமதிகள் மீது வர்த்தக மாற்று விகிதத்தில் எழுந்த பலாபலன்கள் | | | | | | | | | |
| (i) தேயிலை .. .. | | — 26 | — 39 | + 2 | —134 | | | | |
| (ii) இரப்பர் .. | | + 39 | — 25 | — 14 | — 56 | | | | |
| (iii) தெங்கு உற்பத்திப் பொருட்கள் .. | | — 33 | —111 | — 96 | — 79 | | | | |
| (iv) ஏனைய உற்பத்திப் பொருட்கள் .. | | + 6 | + 1 | + 5 | + 6 | | | | |
| (v) சகல உற்பத்திப் பொருட்களும் .. | | — 14 | —173 | —102 | —262 | | | | |
| 3. நிலையான 1959ம் ஆண்டுச் சினைக்கொள் விலைகளின்படி மொத்த தேசிய வருமானம் | 5,854 | 6,064 | 6,087 | 6,391 | 6,349 | + 3.5 | + 0.3 | + 5.0 | — 0.7 |
| 4. மான்னியங்கள் தவிர்த்து மறைமுக வரிகள் (சீராக்கப் பட்டவை) | 389 | 403 | 404 | 425 | 422 | | | | |
| 5. நிலையான 1959ம் ஆண்டுச் சந்தை விலைகளின்படி மொத்த தேசிய செலவு | 6,243 | 6,467 | 6,491 | 6,816 | 6,771 | + 3.5 | + 0.3 | + 5.0 | —0.6 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*ஆண்டின் நடுப்பகுதியிலுள்ள மதிப்பீடுகளை அடிப்படையாகக்கொண்டுள்ளது.

உண்மைத் தேசிய வருமானத்தினதும் செலவினதும் மதிப்பீடுகள் அட்டவணை II அ-13ல் தரப்பட்டுள்ளன. உண்மைத் தேசிய வருமான மதிப்பீடுகள், உண்மைத் தேசிய உற்பத்தியின் மதிப்பீடுகளை வர்த்தக மாற்று விகிதத்தின் விளைவுகளுக்குத் திருத்தியமைப்பதின் மூலம் பெறப்படுகின்றன. உண்மை உற்பத்தியில் 1.8 சதவீத அதிகரிப்பு ஏற்பட்ட பொழுதிலும், 1963ம் ஆண்டின் உண்மைத் தேசிய வருமானம் 1962ம் ஆண்டிலும் பார்க்க 0.7 சதவீதத்தால் தாழ்ந்ததாகவே விளங்கியது. இதற்கு வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்பட்ட பாதகமான போக்கே காரணமாகும். இதன் பயனாக ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் செலாவணிப்பெறுமானம் குறைவுற்றது. 1960ம், 1961ம் ஆண்டுகளிலும் வர்த்தக மாற்று விகிதத்தில் பாதகமான மாற்றங்கள் ஏற்பட்டன. இவ்வாண்டுகள் ஒவ்வொன்றிலும் உண்மைத் தேசிய வருமானத்தின் அதிகரிப்பு விகிதம் உண்மை உற்பத்தியிலும் பார்க்கக் குறைந்ததாகவே இருந்ததென்பது அட்டவணை II அ-13ல் இருந்து தெளிவாகின்றது.

**உற்பத்தியும் ஏற்றுமதிகளும்**

பிரதான விவசாயப் பயிர்களின் உற்பத்தி அளவுகளில் ஏற்பட்ட மாற்றங்களை அட்டவணை II அ-14 காட்டுகின்றது. நடைமுறை விலைகளின் படியும், 1959ம் ஆண்டு விலைகளின்படியும் கணிக்கப்பட்ட ஏற்றுமதிப் பொருட்களின் ஏற்றுமதி விலைப்பெறுமானங்கள் அட்டவணை II அ-15ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை II அ-14**

**பிரதான விவசாயப் பயிர்களின் உற்பத்தி அளவுகள்**

| பண்டம் | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1961ல் இருந்து 1962ம் ஆண்டு | 1962ல் இருந்து 1963ம் ஆண்டு |
| தேயிலை (10 இலட்சம் இறாத்தல்கள்) .. .. | 413 | 435 | 455 | 467 | 485 | + 5.3 | + 4.6 | + 2.6 | + 3.9 |
| இரப்பர் (10 இலட்சம் இறாத்தல்கள்) .. .. | 205 | 218 | 215 | 229 | 231 | + 6.3 | — 1.4 | + 6.5 | + 0.9 |
| தெங்கு உற்பத்திப் பொருட்கள்* (சமமான தேங்காய் நியதி, 10 இலட்சம் தேங்காய்கள்) | 2,313 | 2,183 | 2,601 | 2,811 | 2,523 | — 5.6 | +19.1 | + 8.1 | —10.2 |
| நெல் (10 இலட்சம் புசல்கள்) .. | 36.5 | 43.1 | 43.2 | 48.1 | 49.2 | +18.1 | + 0.2 | +11.3 | + 2.3 |

*கொப்பரா, தேங்காய்த்துருவல், தேங்காயெண்ணெய், தேங்காய்கள் ஆகியவை.

மூலங்கள்: தேயிலைக்கட்டுப்பாட்டு அதிகாரியின் நிர்வாக அறிக்கை;
இரப்பர் கட்டுப்பாட்டு அதிகாரியின் நிர்வாக அறிக்கை;
குடிசன மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்;
இலங்கை மகா வங்கி.

தெங்கு உற்பத்திப்பொருட்கள் அல்லாத ஏனைய பிரதான விவசாயப் பயிர்களின் உற்பத்தி 1963ம் ஆண்டில் அதிகரித்தது. தேயிலையின் உற்பத்தி 1962ம் ஆண்டிலும் பார்க்க உயர்ந்த அதிகரிப்பு விகிதத்தைக் காட்டுகின்றது. இரப்பர், நெல் ஆகியவற்றின் உற்பத்தி அதிகரித்த பொழுதிலும், இவைகள் ஒவ்வொன்றினதும் அதிகரிப்பு விகிதம் முந்தைய ஆண்டிலும் பார்க்க மிகவும் குறைந்ததாகவே விளங்கியது. 1962ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1963ம் ஆண்டில் தெங்குப் பொருட்களின் உற்பத்தி வீழ்ச்சியுற்றது.

தெங்குப் பொருட்களின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கும், இரப்பர், நெல் ஆகியவற்றில் ஏற்பட்ட ஒப்பியல்பிற் குறைவான விரிவிற்கும், 1963ம் ஆண்டில் நிலவிய பாதகமான வானிலேயே பெருமளவிற் காரணமாக இருந்தது.

நடைமுறை விலைகளின்படி பிரதான ஏற்றுமதிப்பொருட்கள் ஒவ்வொன்றினதும் ஏற்றுமதிப்பெறுமானம் 1963ம் ஆண்டில் வீழ்ச்சியுற்றது. 1963ம் ஆண்டு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு அதிகரித்ததெனினும், இரப்பர், தெங்கு உற்பத்திப் பொருட்கள் ஆகியனவற்றின் ஏற்றுமதி அளவுகள் வீழ்ச்சியுற்றன. ஏனைய ஏற்றுமதிப் பயிர்களின் ஏற்றும்தி விலைப்பெறுமானம் அதிகரித்தது. ஆனல் 1962ம் ஆண்டு 5.1 சதவீதத்தால் அதிகரித்த மொத்த ஏற்றுமதிகளின் பெறுமானம், 1963ம் ஆண்டில் 3.5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது.

நிலையான 1959ம் ஆண்டு விலைகளின்படி தேயிலை ஏற்றுமதிகள் 1962ம் ஆண்டில் 6.1 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு எதிராக இவ்வாண்டில் 0.9 சதவீதத்தால் அதிகரித்தன. 1962ம் ஆண்டு முறையே 13.5 சதவீதத்தாலும், 8.4 சதவீதத்தாலும் அதிகரித்த இரப்பர், தெங்கு உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றின் ஏற்றுமதிகள், 1963ம் ஆண்டில் முறையே 5.9 சதவீதத்தாலும், 18.2 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றன.

தேயிலை

1963ம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை 4850 இலட்சம் இருத்தல்களென மதிப்பிடப்பட்டுள்ளது. 1962ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 180 இலட்சம் இருத்தல்கள் அல்லது 3.9 சதவீதம் கொண்ட ஓர் அதிகரிப்பாகும். இது முந்தைய ஆண்டில் ஏற்பட்ட 2.6 சதவீத அதிகரிப்பு விகிதத்திலும் பார்க்க உயர்வானதாகும். ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 42 இலட்சம் இருத்தல்களால் அதிகரித்தது. எனினும் சராசரி இருத்தலுக்கான ஏற்றுமதி விலை 4 சதத்தால் வீழ்ச்சியுற்றதின் பயனுக ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் மொத்தப் பெறுமானம் 83 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைந்தது.

தேயிலை உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டமை, 1963ம் ஆண்டில் சராசரி ஏக்கருக்கான விளைவில் ஏற்பட்ட அதிகரிப்பை ஓரளவு பிரதிபலிக்கின்றது: அதாவது, 1962ம் ஆண்டில் ஒரு ஏக்கருக்கு 790 இருத்தல்களாக இருந்த விளைவு, 1963ம் ஆண்டில் 825 இருத்தல்களாக விளங்கியது. முந்தைய ஆண்டுகளைப் போல் அதிகரித்த முறையில் உரம் பாவிக்கப்பட்டமையே இதற்கு முக்கிய காரணமாக விளங்குகின்றது.

1962ம் ஆண்டில் மாற்றுநடுகை செய்யப்பட்ட 1,770 ஏக்கர்களுடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டில் மாற்றுநடுகை செய்யப்பட்ட பிரதேசம் 2,293 ஏக்கர்களாகும். முன்னர் கொடுக்கப்பட்ட 2500/- ரூபாய்களுக்கெதிராக, 1963ம் ஆண்டிலிருந்து கொடுக்கப்படுகின்ற அதிகரித்த மான்னியமாகிய சராசரி ஏக்கருக்கான 3750/-* ரூபாய்களே, இதற்குப் பெருமளவில் காரணமாக இருக்க வேண்டுமெனக் கருதப்படுகின்றது. 1963ம் ஆண்டு முடிவில் மாற்றுநடுகை செய்யப்பட்ட மொத்தப் பிரதேசம் 6,491 ஏக்கர்களாகும்.

*திருத்தங்கள் செய்யப்படத் தேவையற்ற ஒரு ஏக்கர் காணிக்கு ரூபா 3250/-.

## அட்டவணை II அ-15

### ஏற்றுமதி விலைகளின்படியான பெறுமானங்கள்

| | நடைமுறை விலைகளின்படி | | | | | | | | | நிலையான 1959ம் ஆண்டு விலைகளின்படி | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | சதவீத மாற்றம் | | | | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | சதவீத மாற்றம் | | | |
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1961ல் இருந்து 1962ம் ஆண்டு | 1962ல் இருந்து 1963ம் ஆண்டு | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1961ல் இருந்து 1962ம் ஆண்டு | 1962ல் இருந்து 1963ம் ஆண்டு |
| **உள்நாட்டு ஏற்றுமதிகள்** | | | | | | | | | | | | | | | | | | |
| தேயிலை .. .. | 1,046 | 1,096 | 1,115 | 1,149 | 1,141 | + 4·8 | + 1·7 | + 3·1 | – 0·8 | 1,046 | 1,116 | 1,159 | 1,229 | 1,241 | + 6·7 | + 3·9 | + 6·1 | + 0·9 |
| இரப்பர் .. .. | 298 | 378 | 260 | 290 | 257 | +27·1 | – 31·3 | +11·6 | – 11·5 | 298 | 337 | 286 | 324 | 305 | +13·2 | –15·2 | +13·5 | – 5·9 |
| தேங்காயும், தெங்கு உற்பத்திப் பொருட்களும் .. | 285 | 238 | 247 | 274 | 247 | – 16·5 | + 3·8 | +10·6 | – 9·8 | 285 | 270 | 359 | 389 | 318 | – 5·6 | +33·2 | + 8·4 | – 18·2 |
| ஏனையவை .. .. | 63 | 62 | 58 | 53 | 60 | – 2·4 | – 5·2 | – 8·7 | +13·1 | 63 | 56 | 58 | 52 | 53 | – 11·7 | + 4·3 | – 10·5 | + 1·2 |
| **மொத்தம்** .. .. | 1,692 | 1,775 | 1,681 | 1,766 | 1,704 | + 4·9 | – 5·3 | + 5·1 | – 3·5 | 1,692 | 1,778 | 1,862 | 1,995 | 1,917 | + 5·1 | + 4·7 | + 7·2 | – 3·9 |
| **திருப்பி ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மொத்தம்** .. .. | 62 | 57 | 52 | 42 | 26 | – 7·9 | – 7·9 | – 18·9 | – 38·2 | 62 | 58 | 57 | 49 | 29 | – 6·5 | – 0·4 | – 15·0 | – 39·9 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கப் புள்ளிவிபரங்கள்,
இலங்கை மகா வங்கி.

## இரப்பர்

தேயிலை உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் இரப்பரின் உற்பத்தி திருப்திகர மற்றதாகவே விளங்கியது. 1962ம் ஆண்டில் ஏற்பட்ட 140 இலட்சம் இருத்தல்கள் கொண்ட அல்லது 6.5 சதவீதமான அதிகரிப்பிற்கெதிராக, 1963ம் ஆண்டில் இரப்பரின் மொத்த உற்பத்தி 20 இலட்சம் இருத்தல் களால் அல்லது 0.9 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. 1962ம் ஆண்டு 434 இருத்தல்களாக இருந்த சராசரி ஏக்கருக்கான விளைவு 1963ம் ஆண்டு 440 இருத்தல்களுக்கு உயர்ந்தது. இரப்பர் உற்பத்தி ஒப்பியல்பில் தாழ்வுற்ற தற்கு, இரப்பர் உற்பத்தி செய்யப்படும் பிரதேசங்களில் இவ்வருடத்தின் அநேக மாதங்களில் ஏற்பட்ட பெருமழையே காரணமாகும்.

1963ம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட இரப்பரின் அளவு 150 இருத்தல்களால் வீழ்ச்சியுற்றிருக்க, சராசரி இருத்தலுக்கான இறக்குமதி விலை 6 சதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக இரப்பர் ஏற்றுமதி களின் பெறுமானம் 334 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைந்தது. இது 1962ம் ஆண்டு ஏற்பட்ட 302 இலட்சம் ரூபா கொண்ட அதிகரிப்பிற்கு எதிர்மாறானதாகும்.

மாற்று நடுகை மான்னியத்திட்டத்தின்கீழ் மாற்று நடுகை செய்யப்பட்ட மொத்த பிரதேசம், 1962ம் ஆண்டு முடிவிற்குரிய 187,686 ஏக்கர்களி லிருந்து 1963ம் ஆண்டு முடிவில் 203,598 ஏக்கர்களுக்கு அதிகரித்தது. 1962ம் ஆண்டில் ஏற்பட்ட 10.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1963ம் ஆண்டில் இவ்வதிகரிப்பு 8.5 சதவீதமாக விளங்குகின்றது.

## தெங்குப் பொருட்கள்

தேங்காய் நியதியின்படி உள்நாட்டு நுகர்ச்சிக்கும், ஏற்றுமதிகளுக்கும் என்ற அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ள தெங்குப் பொருட்களின் உற் பத்தி, 1962ம் ஆண்டுக்கான 28110 இலட்சம் காய்களிலிருந்து 1963ம் ஆண்டு 25230 இலட்சம் காய்களுக்கு ஓர் வீழ்ச்சியைக் காட்டுகின்றது. 1961ம் ஆண்டுக்கெதிராக 1962ம் ஆண்டில் ஏற்பட்ட 8.1 சதவீத அதி கரிப்புடன் ஒப்பிடுகையில், இது 10.2 சதவீத வீழ்ச்சியாகும். உரங்களின் உபயோகம் அதிகரித்த பொழுதிலும் தெங்குப் பொருட்களின் உற்பத்தியும் பாதகமான வானிலையால் பாதிக்கப்பட்டுள்ளது.

1962ம் ஆண்டில் (தேங்காய் நியதியின்படி) 15370 இலட்சம் காய் களாக விளங்கிய தெங்குப் பொருட்களின் ஏற்றுமதிகள், 1963ம் ஆண்டில் 21 சதவீதத்தால் வீழ்ச்சியுற்று 12160 இலட்சம் காய்களாக விளங்கின. கொப்பரா, தேங்காயெண்ணெய், தேங்காய்த்துருவல் ஆகியவற்றின் ஏற்றுமதி விலைகள் அதிகரித்த பொழுதிலும், ஏற்றுமதிகளின் பெறுமானம் 269 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றது. தேங்காய்களினதும், தெங்குப் பொருட்களினதும் ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமானத்தில் 1962ம் ஆண்டு ஏற்பட்ட 10.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1963ம் ஆண்டு ஏற்பட்ட வீழ்ச்சி, 9.8 சதவீதமாகும்.

நெல்

1963ம் ஆண்டில் நெல் உற்பத்தியும் பாதகமான வானிலையினுல் பாதிக்கப்பட்டுள்ளது. 1962ம் ஆண்டில் ஏற்பட்ட 49 இலட்சம் புசல்கள் கொண்ட அல்லது 11.3 சதவீதமான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு தற்காலிகமான மதிப்பீடுகளின்படி 11 இலட்சம் புசல்களாக அல்லது 2.3 சதவீதமாக மட்டும் உள்ளது. முந்தைய வருடத்தின் பெரும்போக பருவகாலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 303 இலட்சம் புசல்களுக்கெதிராக 1963ம் ஆண்டின் பெரும்போக உற்பத்தி 316 இலட்சம் புசல்களாக இருந்த பொழுதிலும், சராசரி ஏக்கருக்கான விளைவு 38.0 புசல்களிலிருந்து 37.8 புசல்களுக்கு வீழ்ச்சியுற்றது. முந்தைய வருடத்தின் சிறுபோக பருவகாலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 178 இலட்சம் புசல்களுடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டின் சிறுபோகத்தில் 176 இலட்சம் புசல்கள் உற்பத்தி செய்யப்பட்டன. 1962ம் ஆண்டில் 37.7 புசல்களாக விளங்கிய சராசரி ஏக்கருக்கான விளைவு 1963ம் ஆண்டில் 38.0 புசல்களுக்கு உயர்ந்தது.

உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு, 1962ம் ஆண்டிலிருந்த 253 இலட்சம் புசல்களிலிருந்து 1963ம் ஆண்டு 278 இலட்சம் புசல்களுக்கு அதிகரித்தது. அரிசி நியதியின்படி கணிக்கையில் 1962ம் ஆண்டு 6,53,653 தொன்களாக இருந்த (திருத்தியமைக்கப்பட்ட எண்கள்) நெல் உற்பத்தி, 1963ம் ஆண்டில் 6,68,407 தொன்களுக்கு அதிகரித்தது. 1962ம் ஆண்டில் 4,90,210 தொன்களாகவிருந்த அரிசியின் இறக்குமதிகள், 1963ம் ஆண்டு 5,08,230 தொன்களுக்கு உயர்ந்தன. 1962ம் ஆண்டு 11,03,300 தொன்களாகவிருந்த அரிசியின் மொத்த நுகர்ச்சி, 1963ம் ஆண்டில் 11,45,100 தொன்களுக்கு அதிகரித்துள்ளதென்று மதிப்பிடப்பட்டுள்ளது.